பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | பங்குனி 23 | வெள்ளிக்கிழமை 06.04.2018 | கதிர் 152

## விலகினார் கபீர் காசிம்


கொழும்பு, ஏப்.06

ஐக்கிய தேசியக் கட்சியின் செயலர் பதவியில் இருந்து, விலகுவதற்கு முடிவு செய்துள்ளார் என அமைச்சர் கபீர் காசிம் அறிவித்துள்ளார்.

ஐ.தே.கவின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம்

பக்கம் 03 »

## சட்டத்தை மாற்றுவதற்குள்
# முல்லைத்தீவு முழுவதும் மகாவலி சபை வசமாகும்
### முதலமைச்சர் விக்கி எச்சரிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.06

மகாவலி அதிகார சபைக்கு உள்ள சிறப்பு அதிகாரத்தின் ஊடாக வடக்கில் சிங்களக் குடியேற்றங்கள் வேகமாக நடைபெறுகின்றன. புதியதொரு சட்டத்தை மாகாண சபைகளுக்கு அளிக்கப்பட்ட 13ஆம் திருத்தச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தயாரித்து ஏற்ற பின்னரே மகாவலி அதிகார சபைச் சட்டத்தில் கைவைக்க முடியும்.

பக்கம் 18 »

# தீர்வின்றேல் கூட்டமைப்பு கடும் முடிவு!
### ஐரோப்பிய எம்.பிக்களிடம் சம்பந்தன்



கொழும்பு, ஏப்ரல் 06

"அரசியல்தீர்வை அரசுதரத்தவறினால், - தொடர்ந்தும் இழுத்தடிப்புப் போக்கைக் கையாண்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகக் கடுமையான நிலைப்பாட்டை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்படும்."

- இவ்வாறு நேற்று ஐரோப்பிய நாடாளுமன்றக் குழுவிடம் எடுத்துரைத்துள்ளார் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன்.

பக்கம் 04 »

# தமிழீழமா? சுயாட்சியா? முடிவு சிங்களவர் கையில்
### மாகாண சபை அமர்வில் சிவாஜிலிங்கம்



(எஸ்.நிதரன்)

யாழ்ப்பாணம், ஏப்.05

தமிழர்களுக்குச் சுதந்திர தமிழீழம் வேண்டுமா? சுயாட்சித் தமிழீழம் வேண்டுமா? என்பதைச் சிங்களக் கடும் போக்காளர்களே தீர்மானிக்க வேண்டுமெனத் தெரிவித்த, வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், நாடு துண்டாகும் காலம் வெகுதூரம் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண சபையின்

பக்கம் 03 »

## இது ரகசியம் அல்ல!

பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டமை தெற்கில் தொடர் அரசியல்

பக்கம் 03 »

## சிங்களக் குடியேற்றங்களை எதிர்த்து முல்லையில் செவ்வாய் கவனவீர்ப்பு!
### மாகாண சபை உறுப்பினர்கள் கூடுவர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.06

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட சிங்களக் குடியேறங்கள் தொடர்பில் வடக்கு மாகாணசபைஉறுப்பினர்கள் நேரில் சென்று ஆராயவுள்ளனர். அத்துடன் அங்கு கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றையும் அவர்கள் முன்னெடுக்கவுள்ளனர்.

பக்கம் 18 »

## பிரதமர் ரணிலை எதிர்த்த சு.க. அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு, ஏப் 06

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களுக்குஎதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது.பிரேரணைக்கு

பக்கம் 03 »

## செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றது வடமாகாண சபை
### உறுப்பினர் பசுபதிப்பிள்ளை சாடல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.06

செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றே வடக்கு மாகாண சபை இதுவரை

பக்கம் 03 »

## சாவகச்சேரிப் பிரதேச சபை தலைமை கூட்டமைப்பிடம்
### ஈ.பி.டி.பி., ஐ.தே.க., சு.க. துணை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.05

ஈ.பி.டி.பி., ஐ.தே.க., சு.க., சுயேச்சைக்குழு ஆகியவற்றின் துணையால் சாவகச்சேரிப் பிரதேசசபையையும்தமிழ்த்

பக்கம் 03 »

## சிறுமி துஷ்பிரயோகம்;
# வவுனியா ஆசிரியருக்கு 20 வருடங்கள் கடூழியம்!

வவுனியா, ஏப்.06

வவுனியா – நெடுங்கேணிப் பிரதேசத்தில் சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்த 39 வயது

பக்கம் 18 »

## ரணில் - மைத்திரி இன்று சந்திப்பு

கொழும்பு, ஏப்.06

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று இன்று காலை

பக்கம் 03 »

## மக்களின் 1,000 ஏக்கர் இவ்வருடம் விடுவிப்பு
### 650 ஏக்கர் ஏப். 16 இல் கையளிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.06

வடக்கில் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகளில் இந்த ஆண்டு

பக்கம் 03 »

## கிணற்றிலிருந்து யுவதி ஒருவர் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, ஏப்.06

ஒட்டுசுட்டான் – கருவேலன்கண்டல் பகுதியில் இளம் யுவதி ஒருவர் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கருவேலன்கண்டல் பகுதியில் நேற்று முன்தினம் இரவுவேளை யுவதி ஒருவர் அவரது வீட்டில் உணவு அருந்திவிட்டு நாய்களைக் கட்டுவதற்காக வெளியே சென்றுள்ளார். இதன் பின்னர்

பக்கம் 04 »

# படை வசமுள்ள 530 ஏக்கர் காணி ரூ. 88 கோடி வழங்கி மீட்கப்படும்
### தயாராகிறது அமைச்சரவைப் பத்திரம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.06

வடக்கு – கிழக்கில் இராணுவம் வசமுள்ள காணிகளில் 530 ஏக்கரில் இருந்து வெளியேறுவதற்கு 88கோடி ரூபாவை கோரியுள்ளது

பக்கம் 04 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் | The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir



# முல்லையில் சிங்களக் குடியேற்றங்களை ஆராய வல்லுநர் குழு அமைக்கவேண்டும்

## மாகாண சபையில் ரவிகரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஏப் 05

"முல்லைத்தீவில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் ஆராய துறைசார் வல்லுநர்கள் குழு அமைக்கப்படவேண்டும். அந்தக் குழுவால் தயாரிக்கப்படும் அறிக்கை வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ ஆவணமாக இருக்கவேண்டும்".

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் சபையில் நேற்று வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண சபையில் நேற்று இடம்பெற்ற அமர்வில் சிறப்பு பிரேரணை ஒன்றைச் சபையில் முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்..

அவர் மேலும் தெரிவித்தவை:

தமிழ் மக்களின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கும் மகாவலி 'எல்' வலயம் ஊடான சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்த அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும்.

மகாவலித் திட்டம் என்ற போர்வையில் சிங்களக் குடியேற்றங்களை கொண்டுவரவுள்ள பகுதிக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் நேரில் வந்து ஆராயவேண்டும்.

### தமிழ்ப் பகுதிகளுக்கு சிங்களப் பெயர்கள்

தமிழ் மணம் பரப்பி பரந்து விரிந்து கிடந்த தமிழர்களின் தொன்னிலமான மணலாற்றுப் பிரதேசத்தில் தற்போது சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றுக்குப் புதிய சிங்களப் பெயர்கள் சூட்டப்பட்டு தமிழர்களின் அடையாளங்கள் யாவும் அழிக்கப்பட்டுள்ளன. ஒரு தொன்னில் தமிழ்ப் பிரதேசமாக தமிழ்ப் பெயர்களோடு செழித்திருந்த பகுதியானது தற்போது சிங்களப் பெயர்களோடு சிங்களப்பகுதிகளாகக் காட்சியளிக்கின்றன.

முந்தைத் தமிழனின் குரல்கள் ஓங்கி ஒலித்த மணலாற்று மண்ணை இப்போது நிறைப்பதெல்லாம் குடியேற்றப்பட்ட சிங்களர் குரல்களே. மணலாறு என்ற தமிழர்களின் தொன்னிலப்பிரதேசம் வெலி ஓயா ஆக திட்டமிட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது.

தமிழர்களின் தாயகப் பிரதேசங்களாகிய வடக்கையும் கிழக்கையும் துண்டாடுவதற்காக மணலாற்றுப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்குரிய கருவியாக மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் தெற்கு, கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இறுதிப் போர் முடிவுற்ற பின்னர் 2010 - 2011 காலப்பகுதிகளில் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டனர்.

மீள்குடியேற்றப்பட்ட இந்த மக்களின் 90சதவீதம் ஆனோர் விவசாயிகளாவர். இடப்பெயர்விற்கு முன்னர் தமது நாளாந்த இருப்பிற்காக விவசாயம் செய்த நிலங்களை இவர்கள் மீளக்குடியேறியபோது இழந்திருந்தனர்.

இவர்களால் தலைமுறை தலைமுறையாகப் பயிரிடப்பட்டு வந்த இந்த வயல் நிலங்கள் மகாவலி 'எல்' வலயத்தின் ஓர் அபிவிருத்தி திட்டம் எனக்கூறப்படும் கிவுல் ஓயா திட்டத்தின் கீழ் சிங்கள மக்களுக்கு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்டு, இன்று சிங்கள மக்களால் விவசாயம் செய்யப்பட்டு வருகின்றது.

### நாதியற்றவர்களாக மண்ணுக்குரிய மக்கள்

தமது அன்றாட வாழ்வைநகர்த்திச்செல்ல நாதியற்றவர்களாக மிகுந்த வறுமையில் இன்று இம் மண்ணுக்குரிய மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களுடைய வயல் நிலங்கள் மகாவலி 'எல்' திட்டத்தின் மூலம் சிங்களமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வயற்காணிகள் மீதான தமிழ் மக்களின் உரிமைகள் நீக்கப்படாமலும் உரிமைகோரும் தமிழ் மக்களுக்கு முறையான முன்னறிவித்தல்கள் ஏதும் இன்றியும் இவை சிங்களமக்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது.

வெலி ஓயா பிரதேச செயலாளர் பிரிவு என்பது கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவின் தென்மேற்குப்பகுதிகள், வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவின் தெற்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகள், வனவளத்துறை திணைக்களம், வனவளசீவராசிகள் திணைக்களம் என்பவற்றின்பகுதிகளைக்கொண்டதாக எவ்வித பணிநிலை அறிவித்தல்களும் நடைமுறைகளும் இல்லாமல் உருவாக்கப்பட்டதாகும்.

### கரைவலைப்பாடுகள் சிங்களவர்களிடம்

1963ஆம் ஆண்டு கொக்கிளாய் கடற்கரைப் பகுதியில் 12 கரைவலைப்பாடுகள் காணப்பட்டன. இதில் பதினொரு கரைவலைப்பாடுகள் தமிழ்மக்களுக்கு உரித்துடையனவாக இருந்தன. மிகவும் சிறியளவிலான ஒரு கரைவலைப்பாடு மட்டும் யோசப்பு என்கின்ற சிங்களவருக்குக் காணப்பட்டது. அவர் பருவகாலத்தில் மட்டும் இங்கு வந்து தொழில் செய்பவராகக் காணப்பட்டார். தற்போது இந்த 12பாடுகளும் சிங் களவர்களுக்கு உரித்துடையனவாக மாறிவிட்டன.

இப்படியாக இப்பகுதியில் தற்போது பதிவுசெய்யப்பட்ட குடும்பங்களாக 272 குடும்பங்களும் பதிவு செய்யப்படாத குடும்பங்களாக 232 குடும்பங்களுமாக மொத்தம் 504 குடும்பங்கள், நீர் வழங்கல் பிரிவின் 2016.06.02 ஆம் திகதிய மாவட்ட ஒருங்கிணைப்புகுழுக் கூட்ட புள்ளிவிவரப்படி கொக்கிளாய் முகத்துவாரத்தில் மட்டும் வசித்துவருகின்றார்கள்.

இங்கு குடியேற்றப்பட்டவர்களுக்கு காணி வழங்கும் நடவடிக்கையில் காணிகள் அளவீடுசெய்து வீட்டுத்திட்டம் வழங்குவதற்கு மூன்று தடவைகள் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் நிலஅளவைத்திணைக்களத்தினர் வந்தபோது அவர்களுடன் வாதாடி அவர்களைத் திருப்பி அனுப்ப முடிந்தது. இப்போது அங்கிருக்கும் குடும்பத்தவர்கள் காணி அற்றவர்கள் என்ற மாவட்டச் செயலக புள்ளிவிவரத்தில் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

### இறங்குதுறை பறிப்பு

அத்தோடு இங்கு காலம்காலமாக தமிழ் மீனவர்கள் கடற்றொழில் செய்து வந்த இறங்குதுறைகூடச் சிங்களவர்களின் கைகளில்தான் உள்ளது. இந்த இறங்குதுறை பணியாளர்களால் (உத்தியோகத்தர்களால்) அளவிடப்பட்டுக் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரால் தமிழர்களின் மீனவ அமைப்புக்கு அனுமதிக் கடிதம் வழங்கப்பட்டது.

இதன்பின் மீனவர்கள் தமது இறங்குதுறைக்கான வாடியை அமைத்தல் தொடர்பில் கொழும்பு மீன்பிடித்திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய முல்லைத்தீவு மீன்பிடித்திணைக்களத்தினரால் மாவட்டநீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. தமக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் தங்களுடைய படகுகளை வைத்து தொழில்செய்ய வழியற்றவர்களாகத் தமிழ் மீனவர்கள் கொக்கிளாய் பகுதியில் உள்ளதை இது எடுத்துக்காட்டுகின்றது.

### விகாரைகள் அமைப்பு

குடியேற்றங்களுக்கு முன்னேற்பாடாக பௌத்தர்களே இல்லாத இடத்தில் பௌத்த விகாரைகள் அமைக்கும் செயற்பாடும் முன்னெடுக்கப்படுகின்றது. போர்க்காலத்துக்கு முன் ஒரு விகாரையும் இல்லாமலே முல்லைத்தீவு மாவட்டம் காணப்பட்டது. இப்போது 11 விகாரைகள் இருப்பதாக புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டி காட்டுகின்றன.

கொக்கிளாயில் இராணுவத்தினரின் துணையோடு தமிழ் மக்களின் காணிகளிலே, அம்மன் கோவில் இருந்த இடத்திலே, தற்போது பௌத்த விகாரை கட்டப்படுகின்றது. நாயாற்றுப்பகுதியிலும் பிள்ளையார் சிலைக்கு அருகில் விகாரை அமைக்கப்படுகின்றது. அதற்கு முன்பாக இராணுவ முகாம் இருக்கின்றது. இவை எல்லாம் பாரிய குடியேற்றத்துக்கான ஆரம்ப வேலைகளாகக் கருத முடிகிறது.

### அடுத்த புதிய திட்டமிடல்

போர் முடிவுற்று மக்கள் மீள் குடியமர்ந்த மிகவும் நெருக்கடியான 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் அப்போது இருந்த இராணுவத்தளபதியின் அழுத்தத்தால் நாயாற்றுப் பகுதியில் 78 படகுகள் கொண்டு தென்னிலங்கை மீனவர் தொழில்செய்யும் நிலை ஏற்பட்டது. இந்த 78 என்பது அடுத்த அடுத்த ஆண்டுகளில் தற்போது 300 ஆக உயர்ந்துள்ளது. இவர்கள் பெரும்பாலும் தடைசெய்யப்பட்ட தொழில்களையே செய்கின்றார்கள். சமூகமுரண் செயல்களுக்கு துணைபோகின்றார்கள். குறிப்பாக இப்பகுதியில் கசிப்பு விற்கப்படுவது பிடிபட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டமை, சிலாபம் – இரணவில பகுதியில் அண்மையில் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டமை தொடர்பிலான குற்றவாளி இப்பகுதியில் வைத்த கைதுசெய்யப்பட்டமை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

கொக்குத்தொடுவாய் – புலிபாய்ந்தகல் என்ற இடத்தில் பத்திற்கும் மேற்பட்ட சிங்களவர்க்கு கரைவலை அனுமதிப்பத்திரங்கள் கொழும்பு கடற்றொழில் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு, அங்கும் தொழில் செய்கின்றார்கள். அவர்கள் இப்பகுதியில் அத்துமீறி தொழில்செய்கின்றார்களா எனபார்க்கச்சென்ற இரண்டு கிராம அலுவலர்கள் அங்கு தாக்கப்பட்டனர். இன்றுவரை இதற்கான தீர்வு கிடைக்கவில்லை.

இந்நிலையில், கடந்த 2018.03.20ஆம்திகதி முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்தில் ஆளுநரின் சார்பாளர், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாளர், மாவட்டச்செயலர் உள்ளிட்டோருடன் கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது. இங்கு நாயாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி மற்றும் வெலி ஓயா என்று அழைக்கப்படும் மணலாற்றுப்பகுதி காணிகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அப்பகுதி மக்களின் சார்பாளர் என்ற வகையில் கூட எமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. நீண்டகால அடிப்படையில் தமிழ் மக்களின் இருப்பில் பாதிப்பை உண்டாக்கக்கூடியவகையில் கருத்துப்பரிமாற்றங்கள் அக்கூட்டத்தில் நடந்துள்ளதை அறியமுடிகிறது. எனவே அதி அத்தியாவசியமானது என்பதால் இதனைச் சமர்ப்பிக்கிறேன்.

ஒரு குறிப்பிட்ட மாகாணத்தின் மக்கள் பரம்பல் மாதிரியை இயற்கைக்கு முரணான வகையில் மாற்றுவது அரசின் காணிக் கொள்கையாக அமையக்கூடாது. இது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் விதந்துரை 9.1.2.4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்போது இப்பகுதிகளில் நடைபெறும், நடைபெற்றுகொண்டிருக்கும் நிகழ்வுகளைப் பார்க்கும் போது தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாகின்றது.

இங்கு குறிப்பிட்டப்பட்ட அத்தனை குடியேற்றங்களோடு நாயாறு ஆற்றுக்கு தெற்குப் பக்கமாகவும், மேற்குப்பக்கமாகவும் உள்ள மிகநீண்ட பிரதேசங்களை குடியேற்றங்களுக்காக கைப்பற்றவுள்ளார்கள். இக்காணிகள் உப உணவுப்பயிர்ச்செய்கைக்காக ஏற்கனவே தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டவையாகும். வனத்துறையினரதும், இராணுவத்தினரதும் கையகப்படுத்தலால் தமிழ் மக்கள் இப்பகுதிக்குள் நுழைய முடியவில்லை.

கிழக்கு மாகாணத்தில் கல்லோயா உள்ளிட்ட பல தமிழ்க் கிராமங்கள் இந்த வடிவங்களிலேயே பறிக்கப்பட்டன. இங்கும் தமிழ் மக்கள் சிறுபான்மையாக்கப்படவுள்ளார்கள். இதனால் காலப்போக்கில் தமிழ் மக்கள் இங்கிருந்தும் வெளியேறவேண்டி ஏற்படும். தமது நிலங்களை விட்டு வெளியேறாமல் இருக்கும் தமிழர்கள் சிங்களமக்களின் சார்பாளர்களிடமும் சிங்கள பணியாளர்களிடமும் தமது ஒவ்வொரு சிக்கலுக்கும் செல்லவேண்டி ஏற்படும்.

தற்போது முல்லைத்தீவில் மேற்கொள்ளப்படும் இச்சிங்களமயமாக்கலைத் தடுத்து நிறுத்தாவிட்டால் முல்லைத்தீவில் குலைக்கப்படவிருக்கும் தமிழர் பெரும்பான்மை தொடர்ந்தும் வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கும் பரவும் நிலை ஏற்படும்.

திட்டமிட்ட வகையில் தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இக்குடியேற்றங்கள் நிறுத்தப்படவேண்டியவை ஆகும்.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் மகாவலி 'எல்' வலய எதேச்சையான போக்கு ஏற்றுக்கொள்ளமுடியாததாகும். எமது மண்ணில் நாம் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக்கப்படும் செயற்பாட்டை ஏற்றுக் கொள்ளமுடியாது.

இன்று முல்லைத்தீவில் கட்டவிழ்க்கப்படும் சிங்களமயமாக்கல் முன்னெடுப்புகள் நாளை வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கும் பரவும்.

இப்போது கரைதுறைப்பற்றுடன் இருக்கும் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணியில் வாழும் அப்பகுதி பெரும்பான்மை தமிழ் மக்களையும் தற்போது மேற்கொள்ளப்பட உள்ளதாக அறியப்படும் மாயபுர குடியேற்றத்தையும் மகாவலி 'எல்' அபிவிருத்தி திட்டத்தின் போர்வையில் வெலி ஓயா என்று அழைக்கப்படும் மணலாற்றுடன் இணைக்கப்படுவதற்கான முயற்சி நடைபெறுவதை அறியமுடிகிறது.

இதனால் இவ்வுரையின் ஊடாக மூன்று கோரிக்கைகளை இந்த சபையில் முல்லைத்தீவைச் சார்பாக்கும் ஒரு மக்கள் சார்பாளன் என்ற வகையிலும் மாறுகின்ற ஆட்சிமாற்றங்களிலும் மாறாது தொடர்ந்தும் எல்லைநிலங்களைப் பறிகொடுத்துக்கொண்டிருக்கும் ஒரு தமிழ் மண்ணின் மகன் என்ற வகையிலும் முன்வைக்கவிரும்புகிறேன்.

### கோரிக்கை ஒன்று

தமிழர் நிலங்களில் குறிப்பாக வடமாகாணத்தில் இதுவரை சட்டத்திற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட சிங்களமயமாக்கல் முன்னெடுப்புகளையும் தற்போது முல்லைத்தீவு உட்பட ஏனைய நான்கு மாவட்டங்களிலும் நிகழ்த்தப்படும் சிங்களமயமாக்கல் முன்னெடுப்புகளையும் தகுந்த வல்லுநர்குழாம் ஒன்றை நிறுவி அவர்களின் ஊடாக ஆவணப்படுத்தல்.

இவ் ஆவணப்படுத்தல் வட மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் சிங்களமயமாக்கல் தொடர்பான வடமாகாணசபையின் உத்தியோக பூர்வ ஆவணமாக இருத்தல் வேண்டும்.

### கோரிக்கை இரண்டு

தமிழ் மக்களுக்கான தீர்வுத் திட்டத்தை அனைவரும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இச்சமயத்தில், தமிழ் மக்களின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கும் இக்குடியேற்றங்களை உடன் நிறுத்த வேண்டும் என்ற எமது அழுத்தமான கருத்தினை அரசாங்கத்துக்கு உரிய வகையில் தெரியப்படுத்துதல்.

### கோரிக்கை மூன்று

தற்போது முல்லைத்தீவில் மேற்கொள்ளப்படவிருக்கும் சட்டத்திற்கு புறம்பான மாயபுர குடியேற்றத்தை தடுத்துநிறுத்தும் முகமாக வடமாகாணசபையை சார்பாக்கும் அனைத்து மதிப்புறு மாகாணசபை உறுப்பினர்களும் குறித்த இடத்திற்கு வருகைதந்து தொடரும் சிங்களமயமாக்கலை எதிர்த்து வலிமையான கண்டனங்களைத் தெரிவிக்கும் வகையில் ஒருநாள் கவனவீர்ப்பை மேற்கொள்ளவேண்டும்– என்றார். (ஐ-7)

# பச்சிலைப் பள்ளி பிரதேச சபை தமிழரசுக் கட்சியின் வசமானது!

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச சபையும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வசமாகியுள்ளது.

தவிசாளர் தெரிவுக்கு கோரப் பட்டபோது இலங்கை தமிழரசுக் கட்சியின் சுப்பிரமணியம் சுரேன் தெரிவு செய்யப்பட்டார். மாற்றுத் தெரிவுகள் இருக்கிறதா என உள்ளூராட்சி ஆணையாளர் வினவியபோது கேடயச் சின்னத்தில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் சுயேச்சைக்குழுவின் உறுப்பினர் ஈஸ்வரன் டயாழினி இந்தத் தலைவர் பச்சிலைப் பள்ளி பிரதேசத்தின் அபிவிருத்திக்கும், மக்களின் நலன்களுக்கும் பொருத்தமற்றவர் எனவேதங்களது சுயேச்சைக் குழுவின் நான்கு உறுப்பினர்களும் குறித்த தெரிவுக்கு எதிப்பு தெரிவிப்பதாக அறிவித்தார்.

பின்னர் ஏனைய தெரிவுகள் இல்லாத நிலையில் சிறிலங்கா சுதந்திர கட்சி, ஈ.பி.டி.பி., தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சி உறுப்பினர்களும் தவிசாளர் தெரிவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காத காரணத்தால் சுப்பிரமணியம் சுரேன் பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் தவிசாளராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து உப தவிசாளர் தெரிவிலும் போட்டியின்றி தமிழரசுக் கட்சியின் முத்து குமார் கஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## 'அங்காடிக் குடில்' மாலைச் சந்தை

இயற்கை வழி வேளாண்மை, மருத்துவம் மற்றும் வாழ்வியல் சார் உள்ளூர் உற்பத்திகள் மக்களைச் சென்றடைகின்றமையை இலகுவாக்கும் விதத்தில் இன்று 'அங்காடிக் குடில்' என்ற மாலைச் சந்தை ஒன்றை 'இயற்கை வழி இயக்கம்' ஏற்பாடு செய்துள்ளது.

இன்று பிற்பகல் 3 மணி முதல் இரவு 7 மணி வரை யாழ். ஆஸ்பத்திரி வீதியில், சிங்கர் காட்சியறைக்கு அருகில் உள்ள 'ஜுசி டச்' இல் இந்த அங்காடிக் குடில் என்ற வாரச் சந்தை இடம்பெறும்.

## செவிடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்ததாகச் சுட்டிக் காட்டிய உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, நாளை அது எப்படியிருக்குமென்று தெரியாது என்றும் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் நேற்று மாகாண சபையில் நடந்த சிறப்பு அமர்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகப் பல தடவைகள் உறுப்பினர் ரவிகரன் இந்தச் சபையில் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அது தொடர்பில் பலரும் கதைத்தும் பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டு இருக்கின்றன.

இருந்தும், அங்கு பாரிய குடியேற்றங்கள் ஏற்கனவே செய்யப்பட்டிருக்கின்ற அதேவேளை, தற்போது மேலும் சில குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அது குறித்து ஆராயும் சிறப்பு அமர்வை நடத்துகிறோம். ஆனால் இந்த விடயங்கள் தொடர்பில் நேரடியாக வந்து பார்வையிடுமாறு பல தடவைகள் ரவிகரன் சபையில் கேட்டுள்ளபோதும் இது வரை செல்லவில்லை.

மாங்குளத்துக்கு மாகாண சபையைக் கொண்டு செல்வதென்றும் பேசப்பட்டிருந்த போதும் அங்கு இதுவரை ஒரு கல்லைக் கூட நாட்டவில்லை. ஆனால் சிங்களக் குடியேற்றங்கள் தான் நடக்கின்றன. எங்களுக்குத் தண்ணீர் வரும் என்று சொல்லிக் கொண்டு சிங்களக் குடியேற்றங்கள் தான் வந்து கொண்டிருக்கின்றன - என்றார் (ஐ-7)

## விலகினார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாம் நேற்றுப் பதவி விலகல் கடிதத்தைக் கையளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஐ.தே.கவில் மேற்கொள்ளப்படவுள்ள உள்ளக மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கிலேயே தாம் பதவி விலகியிருப்பதாகவும் கபீர் காசிம் தெரிவித்துள்ளார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளைவுகள் பலவற்றை ஏற்படுத்தும் எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

நாடாளுமன்ற வாக்களிப்பின் பெறுபேறு கூட்டு எதிரணித் தூப்பின்-மஹிந்த அணியின்-வயிற்றில் புளியைக் கரைத்திருப்பதாக அவை சுட்டிக் காட்டுகின்றன.

அவை கூறும் விடயத்தைப் புரிந்து கொள்வதற்கு நாம் பத்துப் பதினைந்து வருட சரித்திரத்தைப் பின்னோக்கிப் பார்க்க வேண்டும்.

நேற்று முன்தினம் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வெற்றியீட்டிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராகக் களமிறங்கித் தோற்றவர்.

முதல் தடவை 1999 இல் சந்திரிகா குமாரதுங்கவிடம். அடுத்த தடவை 2005 இல் மஹிந்த ராஜபக்ஷவிடம்.

இந்த இரண்டு தடவைகளும் புறக் காரணிகளினால் தோல்வி அவர் மீது திணிக்கப்பட்டது.

முதல் தடவை 1999 இல் அவரை எதிர்த்து நின்ற அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேர்தல் சமயத்தில் புலிகள் நடத்திய தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்து அருந்தப்பில் தப்பினார். அது தொடர்பில் தெற்கில் சந்திரிகாவுக்கு எழுந்த அனுதாப அலை - சுமார் 7 லட்சம் அதிகப்படியான வாக்குகளினால் - அவருக்கு வெற்றியைத் தேடித் தந்தது.

ஆக, ரணிலுக்கு ஜனாதிபதித் தேர்தலில் முதல் தோல்வி புலிகளினால். அடுத்த தோல்வியும் கூட அவர்களினால்தான்.

2005 ஜனாதிபதித் தேர்தலில் ரணிலின் வெற்றி உறுதி என்று கணிப்பிடப்பட்ட சமயத்தில்தான் - கடைசி நேரத்தில் - வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகத்தைச் சேர்ந்த தமிழர்களை அந்தத் தேர்தலில் வாக்களிக்காமல் பகிஷ்கரிக்கும்படி புலிகள் வலியுறுத்தி ரணிலின் வெற்றியைத் தட்டி வீழ்த்தினர். சுமார் ஐந்து லட்சம் தமிழர்கள் வாக்களிக்காமல் விட ஒரு லட்சத்து 80 ஆயிரம் வாக்குகளினால் அவர் அந்த வெற்றியைக் கோட்டை விட்டார்.

இனி, அடுத்த ஆண்டு இறுதியில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வரப் போகின்றது. ஐ.தே.கட்சி சார்பில் களமிறங்குவதற்கு ரணில் எப்போதோ தயார்.

அதற்கு முன்னர் அவரை நேரத்துடனேயே வீழ்த்தி, ஜனாதிபதித் தேர்தல் அரங்கிலிருந்து முற்கூட்டியே அகற்றிவிடும் உள்நோக்கத் திட்டத்துடன்தான் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை முயற்சி முன்னெடுக்கப்பட்டது என்பது பரகசியம்.

பிரதமர் பதவியிலிருந்து துரத்தப்பட்டால், கட்சித் தலைமையிலிருந்தும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளர் தெரிவினின்றும் ரணில் ஓரங் கட்டப்பட்டுவிடுவார் என்பது தான் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்காய் நகர்த்தலை முன்னெடுத்த சூத்திரதாரிகளின் வியூகம்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வெற்றிபெற்ற ரணில், 'கபாலி' படத்தில் ரஜனிகாந்த் கூறுவது போல 'திரும்பி வந்துட்டேன்னு சொல்லு!' எனக் கர்ஜிப்பது போன்று அரசியல் அரங்கில் எழுந்து நிற்கின்றார்.

இதில் முக்கிய விடயம் என்னவென்றால், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எந்தச் சிறுபான்மை இன உறுப்பினரும் - வடக்கு, கிழக்கு, மலையகத்தைச் சேர்ந்த எந்த தமிழருமோ - அல்லது இலங்கை முழுவதையும் சேர்ந்த எந்த முஸ்லிமோ - ரணிலுக்குஎதிராகவாக்களிக்கவில்லை.

முதலில் பிரேரணையை முன்மொழிந்தவர்களுள் ஒருவரான காதர் மஸ்தான் எம்.பி. கூட வாக்கெடுப்பு சமயம் வாக்களிக்கவில்லை. அவரும் சபையில் மிஸ்ஸிங்.

அடுத்த ஆண்டில் நடக்கக் கூடிய ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினரின் ஒட்டு மொத்த வாக்குகளும் எந்தப் பக்கம் போகப் போகின்றன என்பதற்கு இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்களிப்பு ஒரு கட்டியம் கூறல்.

கூட்டுஎதிரணி, பேரினவாதத்தை மட்டும் கதைத்துக் கொண்டு அடுத்த தடவை வெல்வதற்கு - அல்லது ரணிலைத் தோற்கடிப்பதற்கு - இங்கு புலிகள் இல்லை என்பது ரணிலுக்கு ஒரு பிளஸ் பொயிண்ட்தான்!

- மின்னல்-

## சாவகச்சேரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியது. அதன் தலைவராக வாமதேவன் தெரிவானார்.

நேற்றுத் தலைவர் தெரிவுக்கு கூட்டமைப்பின் சார்பில் க.வாமதேவனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் க.சதீஸ்வரனும் பிரேரிக்கப்பட்டனர்.

தலைவர் தெரிவுக்காக நடைபெற்ற வாக்களிப்பின்போது ஈ.பி.டி.பி., ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சுயேச்சைக் குழு ஆகியன கூட்டமைப்புக்குத் தமது ஆதரவை வழங்கியிருந்தன. இதனால் கூட்டமைப்பு 23 வாக்குகளைப் பெற்றுக்கொண்டது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி 6 வாக்குகளை மட்டுமே பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி நடுநிலை வகித்தது.

இதனையடுத்துத் தலைவராக க.வாமதேவன் நியமிக்கப்பட்டார். இதன் பின்னர் உப தலைவராகச் செல்வரத்தினம் மயூரன் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். (ஐ-7)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறவுள்ளது.

பிரதமருக்குஎதிராகக்கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அவர் பெரு வெற்றி பெற்றுள்ளார். இதனையடுத்து பிரதமருக்கு எதிராக வாக்களித்த சு.கவின் 6 அமைச்சர்களையும்பதவிவிலக்கவேண்டும் என ஐ.தே.கவினர் விடாப்பிடியாக உள்ளனர்.

இதனையடுத்து இது தொடர்பில் ஆராய்வதற்காகவே இன்று ஜனாதிபதியும் பிரதமரும் சந்தித்துப் பேசவுள்ளனர் எனக் கூறப்பட்டது. (ஐ)

## மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1000 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படும் எனத் தெரிவித்த மீள் குடியேற்ற அமைச்சின் செயலாளர் பொன்னையா சுரேஸ், அவற்றில் முதற் கட்டமாக வலி.வடக்கில் 650 ஏக்கர் காணிகள் எதிர்வரும் 16ஆம் திகதி கையளிக்கப்படவுள்ளன எனவும் கூறினார்.

வலி.வடக்கில் மீள் குடியேற்ற அமைச்சினால் வழங்கப்பட்ட காணி மற்றும் எட்டு இலட்சம் ரூபா பெறுமதியான வீடமைப்புத் திட்ட வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டபோதே அமைச்சின் செயலாளர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருக்கும் யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேற்படி 650 ஏக்கர் காணியை விடுவிப்பது தொடர்பாக எமக்கு அறிவித்துள்ளார். இதன்படி கட்டுவன், மயிலிட்டி மேற்குப் பகுதியில் உள்ள 650 ஏக்கர் காணிகளே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளன.

ஏற்கனவே பொதுமக்கள் பாவனைக்காகத் திறந்துவிடப்பட்டிருந்த அராலி- பருத்தித்துறை வீதியானது 16ஆம் திகதியில் இருந்து காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணிவரை மக்கள் பாவனைக்காக முற்றாகத் திறந்துவிடப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார் - என்றார். (ஐ-7)

## சு.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாக வாக்களித்த ஆறு சு.க. அமைச்சர்களின் பதவி விலகல் கடிதங்களை நிராகரித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அவர்களைத் தொடர்ந்தும் அரசில் நீடிக்குமாறு வலியுறுத்தினார்.

இந்தத் தகவலை சுதந்திரக் கட்சியின் அமைச்சர் தயாசிறி ஜயசேகர நேற்றிரவு தெரிவித்தார்.

பிரதமர் ரணில் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குச் சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் எஸ்.பி.திசாநாயக்க, சுசில் பிரேமஜயந்த, தயாசிறி ஜயசேகர, அநுர பிரியதர்சனயாப்பா, சந்திம வீரக்கொடி மற்றும் செனவிரத்ன ஆகியோர் வாக்களித்தனர்.

அவர்கள் ஆறு பேரையும் அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குமாறு பிரதமரிடம் கோரியிருந்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 33 பேர், தற்போது அவர்கள் 6 பேருக்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இந்தநிலையிலேயே அமைச்சர் தயாசிறி ஜயசேகர இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் நேற்றுக் காலை ஜனாதிபதியைச் சந்திருந்தனர்.

நாம் அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதாக ஜனாதிபதியிடம் கடிதங்களைக் கையளித்தோம். அவற்றை நிராகரித்த ஜனாதிபதி, அமைச்சுப் பதவிகளில் தொடருமாறு வலியுறுத்தினார். அத்துடன் கூட்டு அரசில் தொடர்வோம் என்றும் தெரிவித்தார் என்று அமைச்சர் தயாசிறி ஜயசேகர கூறினார். (ஐ)

## தமிழீழமா?...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்பு அமர்வு நேற்று நடந்தது. அதில் சிங்களக் குடியேற்றங்கள் மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைத் தீவிலே தமிழர் தாயகத்தை அழிக்கவேண்டுமென்றே தெற்கில் மாறி மாறி ஆட்சிக்கு வரும் எல்லா அரசுகளும் கருதுகின்றன. அதற்கமையவே அவர்கள் தங்களது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். தற்போது ஆட்சியிலிருக்கின்றவர்களும் அதனைத்தான் செய்கின்றனர். எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரப்போகின்றவர்களும் இதனையே செய்வார்கள். இது தான் வரலாறுகளாக இருக்கின்றன.

சிங்களக் குடியேற்றங்கள், ஆக்கிரமிப்புக்கள் தொடர்பிலும் அதனைத் தடுத்து நிறுத்துவது குறித்தும் நாங்கள் தற்போது பேசிக் கொண்டிருந்தாலும் இதனையே கடந்த காலத்திலும் எங்களது தமிழ்ப் பிரதிநிதிகள் பேசியிருக்கின்றார்கள். அதற்கமைய இவற்றைத் தடுத்து நிறுத்த எடுத்த அத்தனை முயற்சிகளும் அரசால் நிறைவேற்றப்படாது ஏமாற்றப்பட்டுள்ளது.

ஆயினும் தற்போது இந்தச் சிங்களக் குடியேற்றங்களை தீவிரப்படுத்தும் நடவடிக்கைகள் அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பறி போயிருக்கின்றன. குறிப்பாக புற்றுநோய் வந்தால் ஏற்படும் தாக்கங்கள் போன்று அங்கு ஒவ்வொரு பகுதிகளாக ஆக்கிரமிக்கப்பட்டுக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் பல்வேறு பாதிப்புக்கள் எமக்கு ஏற்படப் போகின்றன.

மகாவலி அதிகார சபையினால் தண்ணீர் தரும் திட்டத்தை வைத்து எங்களுக்குத் தண்ணி காட்டும் செயற்பாடுகளே அங்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எங்களை எவ்வாறு எல்லாம் கூறு போட்டு அழிக்க முடியுமோ அவ்வாறு கூறுபோட்டு அழிக்கும் சதி வேலைகளைத்தான் இந்த அரசும் முன்னெடுத்து வருகின்றது.

ஆகவே அனைவரும் இணைந்து இந்த ஆக்கிரமிப்புக்களை நிறுத்த வேண்டும். அதற்கு எங்கள் தலைமைகள் இந்த விடயத்தில் உறுதியாக இருந்தால் தடுப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அதனை தலைமைகள் செய்ய வேண்டுமென்பதுடன் முதலமைச்சரும் வெறுமனே கடிதத்தை எழுதிவிட்டுத் தப்பித்துக் கொள்ளாது ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்கவேண்டும்.

எங்களிடம் இருந்த ஆயுத பலம் தோற்கடிக்கப்பட்டு அந்தப் பலத்தை நாங்கள் இழந்துள்ளோம்.ஆயினும் எங்களிடம் இருக்கின்ற ஜனநாயகப் பலத்தையும் சரியாகப் பயன்படுத்த வில்லை. ஆகவே இனியாவது உரிய முறையில் எமது பலத்தைப் பயன்படுத்திக் கொண்டு செயற்பட வேண்டும். - என்றார். (ஐ-7)

**நூல்கள் விற்பனைக்கு**

**சேமமடு பதிப்பகம், பத்மம் பதிப்பகம்**

2017 கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை (EPAB) அங்கீகரித்த சுமார் 180 நூல்கள் (40 சிறுவர் நூல்கள்) போதியளவு கையிருப்பில் உள்ளன. மொத்த மாகவும் சில்லறையாகவும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். இந்தியா தமிழ்மண் பதிப்பகத்தின் நூல்களும் கையிருப்பில் உள்ளன.

'சேமமடு புத்தகசாலை'

Chemamadu Book Center, Publication
UG - 50, People's Park, Colombo - 11
Mob - 0777 - 345666, 071 - 2726778
Tel- 011 - 2331475, Fax - 2448624
Mail - chemamadu@yahoo.com

சேமமடு

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை



ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## கூட்டமைப்பு செய்த உதவி

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைப் பதவியில் இருந்து அகற்றுதல், ஐக்கிய தேசியக் கட்சியை நலிவுபடுத்துதல் என்ற திட்டங்களோடு ஆரம்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை கடைசியில் புஸ்வாணமாகிவிட்டது.

அது மாத்திரமல்ல, அது இலக்குத் தவறிக் கடைசியாக ஒருபுறம் மற்றொரு தேசியக் கட்சியான சுதந்திரக் கட்சியை நலிவடைய வைத்தமையோடு, மறுபுறத்தில், தமது கட்சிக்குள்ளும் பொது அரசியலிலும் ரணிலின் வலுவை மேலும் ஸ்திரமாக்கிவிட்டது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட சமயத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் கட்சிக்குள் - ஐ.தே.கவுக்குள் - அவருக்கு எதிராகக் கிளம்பிய முணுமுணுப்புகள், சலசலப்புகள் கூட, அந்தப் பிரேரணை மீதான விவாதம் நேற்றுமுன்தினம் காலை ஆரம்பிக்கப்பட்டதும் கப்சிப்பென அடங்கிப் போயின.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கட்சிக்குள் அதிகம் பேசிய பாலித ரங்கபண்டார, விஜேதாஸ ராஜபக்ஷ போன்றோர் கூடக் கடைசியில் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது ரணிலுக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டியவர்களானார்கள். அவரது கட்சிக்குள் ஒரு ஈ, காக்கை கூட ரணிலுக்கு எதிராக - நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக - வாக்களிக்கத் துணியவில்லை.

அவ்வளவு தூரத்துக்கு இந்தப் பிரேரணையும், அதை ஒட்டி ஐ.தே.கவுக்கு எதிராக நடத்தப்பட்ட சேறு பூசலும் ரணிலுக்குக் கட்சி மீதான பலமான பிடியைத் தந்திருக்கின்றன.

இனிமேல், அவர் தன் விருப்பப்படி கட்சியை மறுசீரமைப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதில் கட்சியினர் யாரேனும் அவரைச் சவாலுக்கு உட்படுத்த முடியாது என்றும் -

நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்த அவரின் அரசியல் வெற்றி, அவரை வலுவாக ஸ்திரப்படுத்தி, உறுதிப்படுத்தி உள்ளது என்றும் - ஐ.தே.கட்சியின் உள்வட்டாரங்கள் கூறுகின்றன.

மறுபுறத்தில், நல்லாட்சி அரசின் மற்றொரு பங்காளிக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை வைத்து நடத்திய அரசியல் போர் அதற்கே வினையாக வந்து முடிந்துவிட்டது.

ஏற்கனவே அக்கட்சி கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில் - உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையாக - சிறுத்துப் போயிருந்தது. பொதுத் தேர்தலில் 96 உறுப்பினர்களை நாடாளுமன்றத்தில் அக்கட்சி பெற்றதாயினும், பின்னர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தரப்பிலான அணியினர் பிரிந்து கூட்டு எதிரணிப் பக்கம் செல்ல, 44 எம்.பிக்களே சு.க. பக்கம் எஞ்சினர். அதுவும் நல்லாட்சி அரசின் கீழ் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் எனப் பதவி பெற்றவர்கள் போக எஞ்சிய அனைத்து எம்.பிக்களும் கூட்டு எதிரணிப் பக்கம் போய்விட்டனர்.

இப்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை என்ற பெயரில் கூட்டு எதிரணியினர் முன்னெடுத்த காய் நகர்த்தலில் சு.கவின் எஞ்சிய எம்.பிக்கள் எண்ணிக்கையும் மேலும் கரைந்து சிறு தொகையாகும் அளவுக்கு நிலைமை போய்விட்டது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் ஒரு திட்டவட்டமான நிலைப்பாட்டை எடுத்து, அதனைக் கட்டளையாக நடைமுறைப்படுத்தச் செய்வதில் சு.க. தலைமை தவறு இழைக்க, எஞ்சி இருந்த எம்.பிக்களும் இரண்டு அணிகளாகப் பிரிந்துவிட்டனர்.

ஆக, எஞ்சியிருந்த 44 எம்.பிக்களில் சிரேஷ்ட தலைவர்கள் பலர் உட்பட சுமார் அரைவாசிப் பேர் நல்லாட்சி அரசில் இருந்து வெளியேறவும், கூட்டு எதிரணியினர் பக்கம் போய் அமரவும் வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை வைத்திருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த நெருக்கடியை எப்படிச் சமாளிக்கப் போகின்றார், இதிலிருந்து கட்சியை எப்படி மீட்டெடுக்கப் போகின்றார், அல்லது கூட்டு எதிரணியின் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவுக்குள் கட்சி முழுதாகக் கரைந்து போகப் பார்த்திருக்கப் போகின்றாரா என்பவற்றை எல்லாம், இனிப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எது, எப்படியென்றாலும், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை வலுப்படுத்தி, உறுதிப்படுத்தி, வெற்றிகொள்ள வைத்ததில், அவரோடு இறுதிவரை தமிழ்க் கூட்டமைப்பு உறுதியாக நிற்கும் என்ற செய்தியே முக்கிய பங்கு வகித்தது என்பது மறுக்கப்பட முடியாத ஒன்று.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை என்ற ஆயுதத்தைப் பயன்படுத்தியே ரணிலை அகற்றுவதற்கு ஐ.தே.கட்சிக்குள் திட்டம் போட்ட தரப்புகள்கூட, தமிழ்க் கூட்டமைப்பின் ஆதரவை வைத்து அந்தப் பிரேரணை முயற்சியைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எப்படியும் தோற்கடித்து விடுவார் என்ற கருத்தினாலேயே ரணிலுக்கு எதிராகக் கெம்பாமல் அடங்கியிருந்தனர்.

இந்த அரசியல் நெருக்கடிச் சமயத்தில் அத்தகைய உறுதிப்பாட்டைத் தந்து நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அதன் தலைமைக்கும், அக்கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மக்களுக்கும் பிரதமர் ரணிலும், அவரது கட்சி பங்கெடுக்கும் இந்த அரசுத் தரப்பினரும் நியாயமாக என்ன கைம்மாறு செய்யப் போகின்றார்கள் என்பதும் பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விடயங்களே.

தமது கூட்டமைப்புக்குள்ளும், வெளியில் தமிழ் மக்கள் மத்தியிலும் கடும் எதிர்ப்பு, அதிருப்தி ஆகியவற்றுக்கு மத்தியிலேயே இந்தப் பிளவுபடாத - ஐக்கியமான - ஒன்றுபட்ட - தமிழர் ஆதரவை கூட்டமைப்பின் தலைமை தனக்குப் பெற்றுத்தந்து நின்றமையைப் பிரதமர் ரணில் மறக்காமல் இருந்தால் சரி.

## தீர்வின்றேல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆறு பேர் கொண்ட குழுவினர் நேற்று எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனை நாடாளுமன்றத்தில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பில் குழுவினரைத் தெளிவுபடுத்திய இரா.சம்பந்தன், முன்னைய அரசு ஜனநாயகப் பண்புகளிலிருந்து விலகியதன் காரணமாகவே தற்போதைய அரசு பதவிக்கு வந்துள்ளது என்றும், இந்த அரசின் சிந்தனையும் நடவடிக்கைகளும் முன்னைய அரசின் நடவடிக்கைகளோடு ஒப்பிடுகையில் சாதகமாக இருந்தாலும், கருமங்கள் மிக மந்தகதியிலேயே இடம்பெறுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் இந்த அரசு இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்திச் சமூகங்களுக்கிடையில் சுமூக நிலைமையைக் கொண்டுவருவதற்கு இணக்கப்பாட்டைக் கொண்டிருப்பதாகவும் கூறினார்.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் விளக்கமளித்த இரா.சம்பந்தன், குறிப்பிட்ட பிரதேசங்களில் பல நூற்றாண்டுகளாக வாழும் மக்களின் சுயமரியாதை, கௌரவம் மற்றும் இறைமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒருமித்த – பிரிபடாத – பிரிக்கமுடியாத நாட்டிற்குள் ஒரு தீர்வையே நாம் வேண்டி நிற்கிறோம் என்றும், இதனைப் பூர்த்தி செய்வதற்கு அரசியல் யாப்பினை உருவாக்கும் கருமங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு விரைவான ஒரு தீர்வினை எட்டவேண்டும் என்றும் கூறினார்.

புதிய அரசியல் யாப்பில் மக்கள் தமது கருமங்களை தாமே முன்னெடுக்கக்கூடிய வகையில், அதிகாரங்கள் பகிரப்படுவதினையும், அத்தகைய அதிகாரங்கள் மத்திய அரசினால் மீளப் பெறமுடியாத வகையிலும், மத்திய அரசு அந்த அதிகாரங்களில் தலையிட முடியாத வகையிலுமான ஒரு கட்டமைப்பையே எதிர்பார்க்கிறோம் என்றும் தெரிவித்த சம்பந்தன், இந்த விடயங்கள் தொடர்பில் நாங்கள் மிகவும் நியாயமான வகையிலேயே செயற்படுகிறோம் என்றும் தெரிவித்தார்.

ஆனால் இந்தக் கருமங்களை அரசு செய்யத் தவறும் பட்சத்தில் எம் மத்தியில் உள்ள தீவிர செயற்பாட்டாளர்களுக்கு அது ஓர் உந்துசக்தியாக அமைவதோடு நாமும் மிகக் கடுமையான ஒருநிலைப்பாட்டை எடுக்கவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்படுவோம் எனவும் வலியுறுத்தினார்.

உறுப்பினர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த சம்பந்தன், தமிழ் மக்கள் இந்த நாட்டில் இரண்டாந்தர மக்கள் குழுவாகப் பார்க்கப்படுவதன் நிமித்தம் அவர்கள் பாதிப்பிற்குள்ளாகி வேதனையடைந்தவர்களாக மட்டுமல்லாது, நிந்திக்கப்பட்டவர்களாகவும் ஒடுக்கப்பட்டவர்களாகவும் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் அரசியல் கோரிக்கைகளை முன்வைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்ட சந்தர்ப்பங்களையும் எடுத்துரைத்தார். இவற்றினால் இந்நாட்டில் தொடர்ந்தும் வாழமுடியாது என்ற நிலைப்பாட்டில் அநேக தமிழ் மக்கள் இந்நாட்டினை விட்டு வெளியேறி உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்து வருவதாகவும், இந்நிலைமை தொடர்ந்தும் நீடிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

சர்வதேச சமூகத்திற்கு இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை மீண்டும் வலியுறுத்திய சம்பந்தன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதில் காட்டப்படும் நீண்ட – தேவையற்ற இழுத்தடிப்புக்கள் தொடர்பில் தமது அதிருப்தியைத் தெரிவித்ததுடன், இந்தச் சட்டமானது நீக்கப்படுவதன் அவசியத்தினையும் வலியுறுத்தினார். (ஐ)

## படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் அதனைக் கொடுத்துக் காணிகளை மீட்பதற்கு அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு வருவதாக மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் பொன்னையா சுரேஸ் தெரிவித்தார்.

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற மீளக்குடியேறிய கடற்தொழிலாளர்களுக்கான உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு – கிழக்கில் கடந்த நான்கு தசாப்த காலமாகப் பல இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது வாழ்வாதரத்தையும் வீட்டுத் திட்டங்களையும் முன்னேற்றமடையச் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. யுத்தத்தினால் இந்தியாவுக்குச் சென்ற மக்களில் 60 ஆயிரம் பேர் மீண்டும் வருவதற்காகப் பதிவுசெய்துள்ளனர்.

இவ்வாறு வருகை தரவுள்ள மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது. அந்த மக்களுக்கும், இங்குள்ள மக்களுக்குமாக மொத்தம் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது.

இதன்படி கடந்த 2016 ஆம் ஆண்டு ஆயிரத்து 400 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 60 வீதமான பணமானது மிக அத்தியாவசியத் தேவையான வீடுகளை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. அதனூடாக 12,700 வீடுகள் கட்டப்பட்டன.

அதேபோன்று 2017 ஆம் ஆண்டு 900 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 5 ஆயிரம் வீடுகள் மாத்திரமே கட்டப்பட்டிருந்தன. ஒதுக்கப்பட்ட பணத்தில் மீதமாகிய 40 வீதமான பணமே ஏனைய உட்கட்டமைப்புக்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது. தற்போது 300 கோடி ரூபா நிதியில் வீடமைப்பு அதிகாரசபை ஊடாகச் செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. ஆனால் அது எந்தளவு தூரம் எமது மக்களுக்குச் சாத்தியமாகும் என்பது எமக்குத் தெரியாது. இந்த வருடம் வீடுகளைஅமைப்பதற்கு எம்மிடம் பணம் இல்லை. அதனால் வெளிநாட்டு நிறுவனங்களோடு பேசிவருகின்றோம்.

கடந்த கால நிலைமைகளால் மக்கள் இழந்தவற்றில் ஏதாவது ஒன்றிற்காவது இழப்பீட்டை வழங்குவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். இதற்காக எம்மிடம் 32 ஆயிரத்து 800 கோவைகள் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றில் எமது இலக்கு 19 ஆயிரம் கோவைகளையாவது நிறைவு செய்யவேண்டும் என்பதேயாகும். அவற்றில் மாதத்திற்கு 2000 கோவைகள் வீதம் பூர்த்தி செய்யவேண்டும். எனவே அதில் உள்ள சிறு சிறு தவறுகளைத் திருத்தி அவற்றை விரைவாகப் பூர்த்தி செய்ய அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டியதுடன் அதற்காக நடமாடும் சேவையையும் ஆரம்பிக்கவுள்ளோம்.

காணியற்ற மக்களுக்குக் காணிகளைக் கொள்வனவு செய்துகொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதற்காக அரசுக்கு 68 கோடி ரூபா நிதி தேவைப்படுகின்றது. இவற்றை விட மீளக்குடியமர்ந்த மக்களுக்குத் தொழில் வாய்ப் புக்களை வழங்குவதே பிரச்சி னையாகவுள்ளது. அதற்காக வடக்கு – கிழக்கில் தொழிற்சாலைகளை அமைப்பதற்குக் கலந்தாலோசித்து வருகின்றோம். மாங்குளம், மட்டக்களப்பு, பூநகரி போன்ற இடங்களில் தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன.

தொழிற்சாலைகளில் கட்டாயமாக வடக்கில் இருந்து 1000 பேருக்கும் கிழக்கில் இருந்தும் 1000 பேருக்கும் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம். அவ்வாறு தொழில்களை வழங்குவர்களுக்கே வீட்டுத்திட்டத்தை அமைப்பதையும் கொடுக்கவுள்ளோம். எட்டு மாவட்டங்களிலும் உற்பத்தி வலயங்களை அமைக்கவுள்ளோம்.

மேலும் படையினர் வசமுள்ள காணிகளில் 530 ஏக்கர் காணிகளை மீளப் பொதுமக்களிடம் ஒப்படைப்பதற்கு இராணுவம் 88 கோடி ரூபா நிதி கோரியுள்ளது. இது தொடர்பாக நாம் நிதி அமைச்சோடு பேசியுள்ளதுடன் இந்த நிதியைப் பெற்று அந்தக் காணிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைத் தயாரித்து வருகின்றோம். – என்றார்.

(ஐ-7)

## கிணற்றிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் காணாமற்போயுள்ளார். யுவதியைக் காணாத நிலையில் அருகில் உள்ள இடங்களில் தேடிப்பார்த்தும் காணவில்லை. இதன் பின்னர் அவர் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் கருவேலன்கண்டல் பகுதியைச் சேர்ந்த நவரத்தினம் பிரியங்கா (வயது - 23) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவே ஒட்டுசுட்டான் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த ஒட்டுசுட்டான் பொலிஸார் சடலத்தை மீட்டு மாவட்ட மருத்துவமனையில் சேர்த்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## நாளை

07.04.2018
சனிக்கிழமை

நட்சத்திரம் : மூலம் பி.ப. 3.13 வரை
திதி : ஸப்தமி பி.இ. 12.07 வரை
சுபநேரம் : 3.08 – 4.38 வரை
இராகுகாலம் : 9.08 – 10.38 வரை

காலைக்கதிர் Kalaikkathir



# காந்தியின் குணாம்சங்களைக் கொண்டவராம் ரணில்! ஹுனுப்பிட்டிய கங்காராம விகாராதிபதி புகழாரம்

கொழும்பு, ஏப். 06

தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மகாத்மா காந்தியின் குணாம் சங்களைக் கொண்டவராவார் என்று கொழும்பு ஹுனுப் பிட்டிய கங்காராம விகாராதி பதி சங்கைக்குரிய கலபொட ஞானசாரதேரர் தெரிவித் தார்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு நல்லாசிகள் வழங் கியபோதே அவர் இவ்வாறு



குறிப்பிட்டார்.



பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிராக நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரே ரணை தோல்வியடைந்த பின்னர் நல்லாசிகளை பெற் றுக்கொள்வதற்காக பிரதமர் நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு ஹுனுப்பிட்டிய கங்காராம விகாரைக்கு சென் றிருந்தார்.

இதன்பின்னர் பிரதமருக்கு நல்லாசி வழங்கி மகாசங்கத் தினர் பிரித் பாராயணத்தை மேற்கொண்டனர்.

## க.பொ.த சா/தரப் பரீட்சையில் சித்தியடைந்த நானாட்டான் ம.வி. மாணவர்கள் கௌரவிப்பு



மன்னார், ஏப்.06

கடந்த வருடம் 2017 ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த சாதாரண தரப் பரிட்சையில் சித்தியைப் பெற்று சாதனை படைத்த மன்னார் நானாட்டான் மகா வித்தியாலய மாணவர்ளுக்கு நேற்றுமுன் தினம் மதியம் பாடசாலையில் அமோக வரவேற் பளிக்கப்பட்டதோடு, மாணவர்களும் கௌர விக்கப்பட்டனர்.

இதன் போது வரலாற்றில் முதல் தடவையாக மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயத்தில் இருவர் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் '9ஏ' சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

நானாட்டான் ம.வி மாணவர்களான ஜீவாஜெய தீசன் அனோஜெயந் மற்றும் அருட்பிரகாசம் டினேசியஸ் ஆகிய இரு மாணவர்களுமே '9ஏ' சித்திகளைப் பெற்றுள்ளனர்.

மேலும், இந்தப் பாடசாலையில் '5ஏ' க்களுக்கு மேல் பெற்றுக் கொண்ட 10 மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், மன்னார் வலயக் கல்வி திணைக்கள அதிகாரிகள், மற்றும் மாணவர்களின் பெற்றோரும் கலந்து கொண்டு மாணவர்களை கௌரவித்தமை குறிப்பிடத்தக் கது. (க)

## ஓட்டோ விபத்தில் மூவர் படுகாயம்



கொழும்பு, ஏப். 06

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஓட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி குடை சாய்ந்து விபத்துக்குள்ளா னதில் மூவர் படுகாயங்களுக்கு உள்ளாகி யுள்ளனர்.

தலவாக்கலை பாமஸ்டன் தோட்டப் பகுதியிலி ருந்து தலவாக்கலை நகரத் திற்கு சென்றுக்கொண்டிருந்த இந்த ஓட்டோ நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் பாமஸ்டன் - தல வாக்கலை பிரதான வீதியில் பாமஸ்டன் தோட் டப் பகுதியில் வீதியை விட்டு விலகி இவ் வாறு விபத்துக்குள் ளாகியுள்ளது.

சாரதிக்கு ஓட்டோவை கட்டுப்படுத்த முடியாததன் காரணமாகவே இந்த விபத்து நேர்ந்துள் ளது என விசாரணை களை மேற்கொள்ளும் பொலிஸார் தெரி வித்தனர். (க)

## நாடாளுமன்றத்தில் சீன இளைஞர்கள்



கொழும்பு, ஏப். 06

நாடாளுமன்றில் முக்கிய தினமான நேற்று முன்தினம் இலங்கை நாடாளுமன்றத்திற்கு சீன இளைஞர்கள் வருகை தந்திருந்தனர்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரே ரணை மீதான விவாதம் நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் நாடாளு மன்றுக்கு சீன இளைஞர்கள் சிலர் விஜயம் மேற்கொண்டு, நாடாளுமன்ற செயற்பாடு களைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

## ஐ.தே.க. ஆதரவாளர்களின் வெற்றிக் கொண்டாட்டம்

கொழும்பு, ஏப். 06

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமரு மானரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணையில் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணி அளவில் இடம் பெற்ற வாக்களிப்பில் வெற்றிபெற்றிருந்தார்.

இந்த வெற்றிக் களிப்பை ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் இரவு பட்டாசு கொளுத்தி நாடெங்கிலும் வெற்றியைக் கொண்டா டினர்.

இதேவேளை, நேற்று முன்தினம் இரவு ஹற்றன் நகரிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி தமது வெற்றியைக் கொண்டா டியமை குறிப்பிடத்தக்கது.

## முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா

கோப்பாய், ஏப்.06

கோப்பாய் சமூக சேவா சங்கம் பாலர் பகல் விடுதி மற்றும் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாலர்பகல்விடுதி விளையாட்டுமைதானத்தில் இடம்பெறும்.

நிகழ்வில் வட மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வை.இந்துஜன், கோப்பாய் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை அதிகாரி க.கமலதாசன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (இ)

## கடமைகளை நேற்று பொறுப்பேற்றார் கொட்டகலை பிரதேச சபை தவிசாளர்





கொழும்பு, ஏப். 06

கொட்டகலை பிரதேச சபையின் தவிசாளர் ராஜ மணி பிரசாத் மற்றும் பிரதி தவிசாளர் முத்துராமலிங் கம் ஜெயகாந்த் ஆகியோர் நேற்றைய தினம் தமது கட மைகளைப் பொறுப் பேற்றுக் கொண்டுள்ளனர்.

சர்வமத வழிபாடுகளில் ஈடு பட்ட பின்னர் சுபநேரத்தில் இவர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள் ளனர்.

நுவரெலியா மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தொழிலாளர் காங் கிரஸின் பொதுச் செயலா ளருமான ஆறுமுகன் தொண் டமான் தலைமையில் இவர் கள் தமது கடமைகளை ஆரம் பித்துள்ளனர்.

இந்த நிகழ்வின்போது, கொட் டகலை பிரதேச சபை யின் இ.தொ.கா உறுப்பினர் கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க)

# மட்டக்களப்பு மாநகர சபை கூட்டமைப்பின் வசமாகியது


கொழும்பு, ஏப். 06

மட்டக்களப்பு மாநகர சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப் பற்றியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார் பில் போட்டியிட்ட தியாகராஜா சரவண பவன் முதல்வராகத் தெரிவு செய்யப் பட்டார்.

நடைபெற்று முடிந்த உள்ளூ ராட்சி மன்றங்களுக்கான தலைவர், பிரதி தலைவர்களைத் தெரிவு செய்யும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில், மட்டக்களப்பு மாநகர சபைக்கான முதல்வர் தெரிவு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணை யாளர் எம்.வை.எம்.சலீம் தலைமை



யில் நேற்று நடைபெற்றது.

மாநகரசபையைப் பொறுத்தவரை யில் எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றிராத நிலையில் நேற்றுக் காலை முதல்வர் தெரிவுக்கான வாக்கெடுப்பு நடத்தப் பட்டுள்ளது.

இதன்போது, திறந்த வாக்கெடுப் பிற்கு 23 உறுப்பினர்களும், இரகசிய வாக்கெடுப்புக்கு 15 உறுப்பினர்களும் ஆதரவளித்தனர்.

இந்த நிலையில், முதல்வர் தெரி வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தியாகராஜா சரவணபவன், தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் சிவலிங்கம் சோமசுந்தரம் ஆகியோர் போட்டியிட்டனர்.

இதில், 25 வாக்குகளைப் பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட தியாகராஜா சரவண பவன் மாநகர முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து பிரதி முதல்வருக் கான தெரிவில், தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு சார்பில் கந்தசாமி சத்திய சீலன், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் தெய்வநாயகம் சிவலிங்கம், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் ஸ்ரீபன் ராஜன் ஆகியோரின் பெயர்கள் பிரேரிக் கப்பட்டுள்ளன.

அதில் 24 வாக்குகளைப் பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார் பில் போட்டியிட்ட கந்தசாமி சத்திய சீலன் பிரதி முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு வெளிநாடு செல்ல அனுமதி

ஐக்கிய தேசியக் கட்சியின் முன் னாள் பொதுச் செயலாளர், திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு வெளிநாடு செல்ல, கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.


களனிப் பல்கலைக் கழகத்தின் கல்வியியலாளர்கள் சங்கம், ஆஸ்தி ரேலியாவில் ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தில் பங்கேற்க விடுத்திருந்த அழைப்பையடுத்து, இதற்கு அனுமதி வழங்கக் கோரி அவர் நீதிமன்றில் முன்வைத்த கோரிக்கைக்கமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அடுத்த மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை ஆஸ்திரேலியாவுக்குச் சென்று வர திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு நீதி மன்றம் அனுமதி வழங்கியுள்ளது.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையில், ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது என தவறாக குறிப்பிட்டு ஆவணம் ஒன்றை தயா ரித்து அதனை ஊடகங்களுக்கு வழங் கியமை தொடர்பில் இவர் மீது குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய – இலங்கை கடல் எல்லையை மீளாய்வு செய்யுமாறு வலியுறுத்தல்




கொழும்பு, ஏப். 06

இலங்கைக்கும் இந்தியா விற்கும் இடையிலான கடல் எல்லையை மீளாய்வு செய்யு மாறு, இந்திய நாடாளுமன்றத் தில் வலியுறுத்தப்பட்டுள்ளது எனத் தகவல் கிடைத்துள்ளது.

இந்த வலியுறுத்தலை, இந் திய வெளிவிவகார அமைச் சின் நாடாளுமன்ற நிலையியற் குழுவின், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் விடுத்துள்ளார்.

தமிழக மீனவர்கள் கடற் பரப்பில் முகம் கொடுக்கின்ற பிரச்சினைகள் குறித்து இந் திய நாடாளுமன்ற அமர்வில் கரிசனை வெளியிடப்பட்டுள் ளது.

காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சசிதரூர் தலைமை யிலான இந்தக் குழுவின் நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் நேற்று முன்தினம் இலங்கை - இந்திய உறவு தொடர்பிலும் மீனவர்களின் பிரச்சினை தொடர்பிலும் விவாதிக்கப் பட்டிருந்தது.

இதேவேளை, இலங்கை சீனா உறவு மற்றும் அதனால் இந்தியாவுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு தொடர்பிலும் இந்த குழு அக்கறை செலுத்தியுள் ளது எனத் தகவல்கள் வெளி யாகியுள்ளன.

## தமிழை கொலை செய்யும் அ' புர அரச திணைக்களம்!




அனுராதபுரம் மாவட்ட செயலகத்தில் காணப்படும் அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் திணைக் களத்தின் பெயர்ப் பலகையில் தமிழ் மொழி மிகவும் பிழையாக எழுதப்பட்டுள்ளது.

'அளவீட்டு அல்குகளும, நியமனகளு'ம, சேவைளும திணைசு'கமை' எனப் பிழை யாக எழுதப்பட்டுள்ளதை காணக் கூடிய தாக உள்ளது.

அரச திணைக்களங்களிலேயே இவ்வா றாக தமிழ் மொழி பிழையாக எழுதப்படு வதால் பலரும் விசனம் வெளியிட்டு வரு கின்றனர்.

அரச கரும மொழிகள் அமைச்சரின் கவ னத்திற்கு இந்த விடயம் செல்லவேண்டும் என மக்கள் தெரிவித்துள்ளனர்.

## மேலதிக வகுப்புக்களுக்கு தடை

கொழும்பு, ஏப். 06

பாடசாலை நடைபெறும் தினங்க ளில் காலை 7.30 மணியிலிருந்து பிற்பகல் 1.30 மணிவரையில் இடம் பெறும் மேலதிக வகுப்புக்களை தடை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள் ளப்படவுள்ளது என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித் துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் வாசு தேவ நாணயக்கார முன்வைத்த கேள் விக்கு வாய்மூலமாக பதிலளிக்கை யிலேயே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

மேலதிக வகுப்புக்களை தடை செய்வதற்கான ஆவணம் சமர்ப்பிக் கப்படும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

# தோட்ட அதிகாரியை இடமாற்ற கோரி தொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்





அக்கரபத்தனை பெருந் தோட்ட கம்பனியின் கீழ் இயங்கும் டொரிங டன் தோட்ட அதிகாரியை இடமாற்றம் செய்யக்கோரி நேற்றைய தினம் 12 நண்பகல் மணியளவில் டயகம – ஹற் றன் பிரதான வீதியில் டொரிங்டன் அயோனா சந்தியில் சுமார் 500 இற் கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர் கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த தோட்டத்தில் கடந்த ஒரு வாரகாலமாக வேலை நிறுத்தப்போராட் டத்தில் ஈடுபட்ட வந்த நிலையில் நேற்று இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த தோட்டத்தின் முகாமையாளர் தோட்டத் தொழிலாளர்களுக்கு உரித் துடைய எந்த சலுகைகளையும் செய்து கொடுக்காமை, தொழிலாளர்களிட மிருந்து வேலையை மாத்திரம் பெற் றுக்கொள்கின்றார் எனவும், தேயிலை மலைகளை முறையாக பராமரிக்காத மையின் காரணமாக தேயிலை மலைகள் காடாகி வருகின்றன எனவும், தொழி லாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக எவ்வித செவிமடுத்தலு மின்றி செயற்படுகின்றார் எனவும், இதனால் தொழிலாளர்கள் சொல் லொண்ணாத் துயரங்களை அனுப வித்து வருகின்றனர் எனத் தொழிலா ளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இது குறித்து தொழிற்சங்கவாதிக ளிடம் தெரிவித்தபோதிலும் அவர் களும் தோட்ட முகாமையாளருக்கு ஆதாரவாகவே செயற்படுகின்றனர். இது குறித்து உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறித்த தோட்டத்தில் கடந்த சில வாரங்களுக்கு முன் தொழிலாளி ஒருவர் தனக்கு வேலை வழங்காதமை யின் காரணமாகத் தற்கொலை செய்ய முயற்சி செய்த போது ஏனைய தொழி லாளர்களால் காப்பாற்றப்பட்டு போராட் டத்தில் ஈடுபடப்பட்டமையும் சுட்டிக் காட்டத்தக்கது.

# நாட்டில் வன அடர்த்தியை அதிகரிக்கும் வகையில் வெளிநாடுகளிலிருந்து மரங்கள் வந்துசேரும்!



### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 06

வன வளத்தைப் பாதுகாத்து நாட்டின் வன அடர்த்தியை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு நாட்டுக்குத் தேவையான மரங்களை வெளிநாடுகளில் இருந்து கொண்டு வருகின்றமையைப் பலப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்ற அரச மரக் கூட்டுத்தாபனத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடு முகங்கொடுத்துள்ள கால நிலை மாற்றத்திற்கு மத்தியில் நாட்டின் வன அடர்த்தியை அதிகரிக்க வேண்டும். 28 வீதமாகவுள்ள நாட்டின் வன அடர்த்தியை 32 வீதமாக அதிகரிப்பது அரசின் இலக்காகும் . இதற்கு அரச மரக்கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு மிகவும் முக்கிய மானதாகும் .

கூட்டுத்தாபனத்தின் மூலம் திறைசேரிக்கு வழங்கப்படும் நிதி குறித்தும் மரக்கன்றுகளை நடுதல் மற்றும் வன அடர்த்தியை அதிகரிப்பதற்காக தற்போது அதிக முதலீட்டைச்செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும் விளக்கிய ஜனாதிபதி, இதன்போது வனபாதுகாப்புத்திணைக் களத்துடன் இணைந்து பணியாற்ற வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும், வீட்டுத்தளபாட உற்பத்தித்துறையில் உள்ள போட்டித் தன்மைக்கு முகங்கொடுப்பதற்கு அரசமரக் கூட்டுத்தாபனம் தனது தரத்தையும் நியமங்களையும் அதிகரிக்க வேண்டியதன் தேவையையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அரச மரக்கூட்டுத்தாபனத்தில் 30 வருட சேவையை நிறைவு செய்த மற்றும் ஓய்வுபெற்ற ஊழியர்களைப் பாராட்டி தங்கப்பதக்கங்கள் ஜனாதிபதியால் வழங்கப்பட்டன.

ஊழியர்களின் பல்கலைக் கழக தகைமை பெற்றுள்ள பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்களும் இதன்போது வழங்கப்பட்டன.

அரச மரக்கூட்டுத்தாபனத்தின் 'அரைநூற்றாண்டுப் பயணம்' என்ற நூல் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்திற்கு 50 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவு முத்திரை தபால் சேவைகள், முஸ்லிம் சமய அலுவல்கள் திணைக்களத்தின் செயலாளர் ஆர்.எம்.டி.பி. மீகஸ் முல்லவால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

அரச மரக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் பி.திசாநாயக்க ஜனாதிபதிக்கு விசேட நினைவுச் சின்னமொன்றை வழங்கினார்.

இந்த நிகழ்வில் பிரதி அமைச்சர் அநுராத ஜயரத்ன, மகாவலி அபிவிருத்தி சுற்றாடல்துறை அமைச்சின் செயலாளர் அநுர திசாநாயக்க ஆகியோரும் திமு ஜயரத்ன, நந்திமித்ர ஏக்க நாயக்க, பண்டு பண்டார நாயக்க, பி.தயாரத்ன உள்ளிட்ட சுற்றாடல்துறை முன்னாள் அமைச்சர்களும் செயலாளர்களும் கலந்துகொண்டனர்.

# தமிழில் பதிலளித்த சிங்கள அமைச்சர்

கொழும்பு, ஏப். 06

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்கவின் பதிலால் பலர் குழப்பமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பின் போது சிங்கள அமைச்சர், உறுப்பினர்கள் தங்கள் தாய் மொழியில் வாக்குகளை வழங்கியிருந்தனர்.



தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆம் , இல்லை எனவாக்களித்திருந்தனர். இந்த நிலையில் இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க சிங்கள மொழியை மறந்து 'இல்லை' எனதமிழில் எதிர்ப்பு வெளியிட்டிருந்தார்.

சுஜீவ சேனசிங்கவின் இந்த வாக்களிப்பினால் அங்கிருந்த அனைவரும் குழப்பத்துடன் அவரை நோக்கிப் பார்த்துள்ளனர். பின்னர் சிங்களத்தில் தனது வாக்கினை மீண்டும் பதிவு செய்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாக்கெடுப்பு தேசிய தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

இந்த நிலையில் லட்சக்கணக்கான இலங்கை மக்களின் அவதானம் இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க மீது திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

# மகாவலி அதிகார சபைக்கு 147 உத்தியோகத்தர் நியமனம்



கொழும்பு, ஏப். 06

இலங்கை மகாவலி அதிகார சபைக்குப் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள 147 உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதியால் அடையாளரீதியாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதன்போது ஜனாதிபதி கருத்து தெரிவிக்கையில்-

நாட்டின் அபிவிருத்திக்காகவும் மக்களின் நலனுக்காகவும் இலங்கை மகாவலி அதிகார சபை எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக புதிய உத்தியோகத்தர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அநுரதிசாநாயக்க, இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம், ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சரத் சந்ரசிறி விதான உள்ளிட்ட பணிப்பாளர் சபையினர் கலந்து கொண்டனர்.

(க)

# பாடசாலைகளுக்கான விடுமுறை அறிவிப்பு

கொழும்பு, ஏப். 06

அனைத்து தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் பாடசாலைகளிலும் முதலாம் தவணைக்கான விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகளுக்கு, 6 ஆம் திகதி விடுமுறை வழங்கப்பட்டு 2 ஆம் தவணை ஏப்ரல் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், முஸ்லிம் பாடசாலைகளுக்கு 11 ஆம் திகதி விடுமுறை வழங்கப்பட்டு, ஏப்ரல் 18 ஆம் திகதி ஆரம்பிக்கும் என அறிவிக்கப்படுகிறது.

(க)

# சமூக வலைத்தளங்கள் தொடர்பில் 3 மாதத்துக்குள் 720 முறைப்பாடுகள்

கொழும்பு, ஏப். 06

இந்த வருடத்தின் முதல் மூன்று மாத காலப்பகுதிக்குள் சமூக வலைத்தளங்கள் தொடர்பில் 720 முறைப்பாடுகள்கிடைக்கப்பெற்றுள்ளன என இலங்கைக் கணினி அவசர நடவடிக்கைகுழு தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளில் அதிகமானவை பேஸ்புக் தொடர்பிலேயே பதியப்பட்டுள்ளன என அந்த அமைப்பின் ஊடகப் பேச்சாளர் ரொஷான் சந்த்ரகுப்த தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகளின் நூற்றுக்கு 75 வீதமானவை போலி கணக்குகள் தொடர்பிலானவை என இலங்கை கணினி அவசர நடவடிக்கைக் குழு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை டுவிட்டர், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைத்தளங்கள் தொடர்பிலும் கடந்த மூன்று மாத காலப்பகுதிக்குள் இலங்கை கணினி அவசர நடவடிக்கை குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் தற்பொழுது தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என இலங்கை கணினி அவசர நடவடிக்கைக் குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உணவு விஷமானதால் 45 மாணவர் பாதிப்பு

கொழும்பு, ஏப். 06

கல்விச் சுற்றுலா சென்ற 45 பாடசாலை மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் பிரதேசத்திற்கு கல்விச் சுற்றுலா சென்ற மொனராகலை பாடசாலை மாணவர்களின் உணவு விஷமானதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அநுராதபுரம் விகாரை ஒன்றில் தங்கியிருந்த மாணவர்களால் இந்த உணவு தயாரிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்படுகின்றது.

மாணவர்களின் தற்போதைய நிலை ஆபத்தாக இல்லை என வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(க)

காலைக்கதிர் Kalaikkathir



## தரம் 5 புலமைப் பரீட்சை:
## சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்க ஏற்பாடு

நீர்வேலி, ஏப்.06

நீர்வேலி வலிகாமம் கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் 2017 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இச் சங்கத்தின் எல்லைப் பரப்புக்குட்பட்ட அங்கத்தவர்களின் பிள்ளைகளில் புலமைப் பரிசில் பரீட்சையில்சித்தியடைந்தபிள்ளைகளை கௌரவிப்பதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. அத்துடன் இப் பிரதேசத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர் அங்கத்தவராக இல்லாதவிடத்து அங்கத்தவராக இணைந்து விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இக் கௌரவிப்புக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன் பொது முகாமையாளர், வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி என்ற முகவரிக்கு தமது சுய விவரத்தை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## முன்பள்ளி ஆசிரியர் சேவை போட்டிப் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.06

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் முன்பள்ளி ஆசிரியர் சேவையின் தரம் 111 பதவிக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்காக நாளை 7 ஆம் திகதி நடைபெறவிருந்த திறந்த போட்டிப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் மறு திகதி குறிப்பிடும் வரை பிற்போடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டிப் பரீட்சைக்கான முன்னைய விளம்பரங்களில் கோரப்பட்ட அனைத்துத் தகைமைகளையும் கொண்டிருந்தும் 40 வயதுக் கட்டுப்பாடு காரணமாக விண்ணப்பிக்க முடியாதவர்களும் 20.04.2018 ஆம் திகதி 45 வயதைப் பூர்த்தி செய்யாதவர்களாக இருக்கும் பட்சத்தில் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். மேலும் இவ் விண்ணப்பங்களை 2018.04.20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் எமது அலுவலகத்திற்கு நேரில் சமர்ப்பிக்க முடியும் எனவும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் சி.ஏ.மோகன்ராஸ் தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சை நடத்துதல் தொடர்பான திகதி சகல பரீட்சார்த்திகளுக்கும் பின்னர் அறிவிக்கப்படுமெனவும், இவ்விடயம் தொடர்பில் மேலதிக விவரங்கள் எவையும் தேவைப்படின் 021 - 2219939 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## தினசரி ராசி பலன் (06.04.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பிவருடம் பங்குனித்திங்கள் 23 ஆம் நாள் வெள்ளிக்கிழமை ஷஷ்டித்திதி இரவு 9.04 மணி வரை. பின்னர். ஸப்தமி. நட்சத்திரம்: கேட்டை. பகல் 11.42 மணி வரை. மரணயோகம் பகல் 11.42 வரை. பின்னர் சுபயோகம்.*

**ராகுகாலம்** - *பகல் 10.41 மணி முதல் 12.13 மணி வரை*

**சுபநேரம்** - *காலை 06.01 மணி முதல் 07.31 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *பங்குனி மாத தேய்பிறை ஷஷ்டி.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** கவலையான நாள். தனவரவு குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். வியாபாரத்தில் பொருள்கள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும். மாணவர்கள் தேர்வில் தோல்வி அடைவார்கள்.

**ரிஷபம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக .இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். மாணவர்கள் கல்வியிலும் பார்க்க விளையாட்டில் ஈடுபாடு கொள்வார்கள்.

**மிதுனம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம், பதவி உயர்வு என்பன முயற்சியின் மேல் கிடைக்கும். குடும்ப நிலையில் இனிமையான சூழ்நிலை நிலவும்.

**கடகம்** அனுகூலமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரிக்கும். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை களிப்புத் தரக்கூடும்.

**சிம்மம்** துயரமான நாள்.எதிர் பார்த்த பணம் வரத் தாமதமாகும். பொருளாதாரம் நலிவடையும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். பிள்ளைகளால் கவலை கூடும்.

**கன்னி** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். தேவையற்ற வீண் செலவுகள் உண்டாகும். குடும்பத்தில் கலகலப்பும், சலசலப்பும் கலந்து காணப்படும்.

**துலாம்** மகிழ்ச்சியான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாள் காணாத உறவினரைக் கண்டு மகிழ்ச்சி அடைவார்கள். சுய தொழிலில் வருமானம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் பரிவும், பாசமும் அதிகரிக்கும். சொந்த வீடு வாங்கும் எண்ணம் நிறைவேறும். வாகன வசதிகள் பெருகும்.

**தனுசு** யோசனையான நாள். பணம் பற்றாக் குறையாக இருக்கும். குடும்பத்தில் சச்சரவுகள் உண்டாகும். வியாபாரத்தில் போட்ட முதலீடுகளால் நட்டம் உண்டாகும். உறவினர்களுடன் கருத்து மோதல்கள் உண்டாகும்.

**மகரம்** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப உறவில் நல்லிணக்கம் காணப்படும். வியாபாரத் தொழில் விருத்தி அடையும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவார்கள்.

**கும்பம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். குடும்பத்தில் ஓரளவு அமைதி நிலவும். உடல் நிலை பாதிப்படையும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**மீனம்** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சி காணப்படும். உத்தியோகத்தில் விரும்பிய உயர்வுகள் கிடைக்கும்.

**சந்திராட்டம நாள்: அசுவினி, பரணி, கார்த்திகை, ரோகினி, மிருகசீரிடம் 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

## கூட்டமைப்பு தொடர்பான மைத்திரியின் கருத்துக்கு தெற்கு ஊடகங்கள் விமர்சனம்

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்று பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பது அரசியல் தற்கொலைக்குச் சமமாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்தைத் தென்னிலங்கை ஊடகங்கள் கடுமையாக விமர்சித்துள்ளன.

2015 ஜனவரி 8 இல் ஏற்பட்ட அரசியல் மாற்றத்துக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆதரவு பெரும் பங்காற்றியது என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மறந்துவிட்டாரா? என அவை கேள்வி எழுப்பியுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற் கடிக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்கும் என ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர் மங்கள சமரவீர ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறினார்.

அதன்போது, உணர்ச்சிவசப்பட்ட ஜனாதிபதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெற்று நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பது அரசியல் தற்கொலைக்குச் சமமாகும்.

கூட்டமைப்பின் ஆதரவுடன் நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்தால் மக்கள் சந்தேகப்படுவார்கள். கூட்டு அரசின் பெயரை அது கெடுத்துவிடும் என்றார்.

இது தொடர்பிலேயே தென்னிலங்கைஊடகங்கள்கடுமையாக விமர்சித்துள்ளன.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன பொது அணி வேட்பாளராகக் களமிறங்கியபோது, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஆதரவை நாடினார்.

அதனால்தான் தமிழ் மக்களின் ஒட்டு மொத்த வாக்குகளையும் பெற்று ஜனாதிபதி பதவிக்கு மைத்திரிபால சிறிசேன வந்து அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தினார் என்று அவை குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் காப்பாற்று வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பின்னணியாகச் செயற்படுகின்றார் எனவும் தென்னிலங்கை ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

ஜனாதிபதியுடன் நெருக்கமான சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணைக்கு ஆதரவளிக்க முடியாது எனப் பகிரங்கமாகவே தெரிவித்துள்ளமையை அந்த ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (ஐ)

## மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை-

**யாழ் பிரதேசத்தில்** - காங்கேசன்துறை, மயிலிட்டி, தையிட்டி, வறுத்தலைவிளான், வீமன்காமம், பலாலி, சுழிபுரம்,பத்தனை, கல்லவேம்படி, காங்கேசன்துறை கரிசன் 5 ஆவது பொறியியல் படைமுகாம்,காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம்,மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப் படை முகாம்,மயிலிட்டி கரிசன் 5வது பொறியியல் படைமுகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய்வுகாலவிடுதி ஆகிய இடங்களிலும் -

**மன்னார் பிரதேசத்தில்** - கரிசலிலிருந்து தலைமன்னார் வரை,கட்டையடம்பன், மளவராயர் கட்டையடம்பன், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை,கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ்தொழிற்சாலை, தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், Palmayrah House ஆகிய பிரதேசங்களிலும் - மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## ஜி.சீ.ஈ (சாதாரணதர) பரீட்சை பெறுபேறு

2017 ஆம் ஆண்டின் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் கிடைக்கப்பெற்ற மாணவர்களின் பெறுபேறுகளை பாடசாலை அதிபர்கள் 'காலைக்கதிருக்கு' அனுப்பி வைத்துள்ளனர். அந்தப் பெறுபேறுகள் வருமாறு:-

### யா/பெரியபுலம் ம.வி

செ.நிலக்ஷன் - 7A, B, C, ந.கஜீவன் - 6A, 2B, S, வி.அபிஷேக் - 5A, 3B, C, க.அனிஸ்ரலன் - 5A, 2B, C, S, சி.சிந்துஜா - 2A, 3B, 3C, ம.மதுஷனா - 2A, B, 2C, 3S, ம.டிலக்ஷனா - 2A, 3C, 3S, பா.மிதுனராஜா - A, 2B, 5C, S, சா.விதுரன் - A, 5C, ம.ஜதுர்ஷா - 4B, 2C, 2S, ச.காவேரி - 4B, 4S, ச.லேபிகா - 3B, 5S, சி.வித்தியாசாலினி - 2B, 6C, த.விந்துஜா - 2B, 4C, 2S, சூ.சானுஜா - 2B, 3C, 3S, கி.திவ்யா - B, 4C, 3S, வி.சிந்துஜா - B, 2C, 4S, பி.ருசிந்தன் - 5C, 3S.

### நல்லூர் மங்கையர்க்கரசி ம.வி

நா.கனித்தா - A, B, 2C, 3S, யோ.நிருபரன் - A, B, C, 3S, வ.விந்தியா - A, B, C, 3S, ம.தினேஸ்வரன் - 2B, 6C, கு.சாருஜா - 3B, 5C, S, ர.நிதர்சினி - B, 2C, 4S, நி.நிருஷன் - 3C, 4S, க.வர்ணிக்கா - 3C, 4S, ல.சுவஸ்ரிகன் - 4C, 2S, பா.வைஷ்ணவி - B, 2C, 2S.

## பொதுக்கூட்டம்

இருபாலை கிழக்கு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நிலையமண்டபத்தில் உள்ளூராட்சித் திணைக்கள சனசமூக நிலைய உத்தியோகத்தர் சு.உதயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கிராம அபிவிருத்தி பற்றி ஆராய இருப்பதால் சகலரையும் கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (இ)

காலைக்கதிர்
Kalaikkathir






# ஐ.பி.எல். திருவிழா நாளை ஆரம்பம்

## 8 அணிகளினதும் பலமும் பலவீனமும்

11 ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி நாளை சனிக்கிழமை முதல் மே 27ஆம் திகதி வரை இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடக்கிறது. மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் நடக்கும் தொடக்க ஆட்டத்தில் நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸும், முன்னாள் சம்பியன் சென்னை சூப்பர் கிங்ஸும் மல்லுக்கட்டுகின்றன. போட்டியில் பங்கேற்கும் 8 அணிகளின் பலம், பலவீனம் பற்றிய ஓர் அலசல் வருமாறு:-

### சென்னை சூப்பர் கிங்ஸ்

**கப்டன்: டோனி, பயிற்சியாளர்: ஸ்டிபன் பிளமிங்**

இதுவரை பங்கேற்றுள்ள 8 ஐ.பி.எல். தொடர்களிலும் அரைஇறுதியை அதாவது 'பிளே - ஒப்' சுற்றை எட்டிய ஒரே அணி சென்னை சூப்பர் கிங்ஸ் தான். சூதாட்ட சர்ச்சையால் 2 ஆண்டு கால தடைக்கு பிறகு மறுபிரவேசம் செய்துள்ளது.

கப்டன் மற்றும் விக்கெட் கீப்பிங்கில் டோனியின் அனுபவமும், சுரேஷ் ரெய்னா, வொட்சன், பாப் டு பிளிஸ்சிஸ், கேதர் ஜாதவ், வெய்ன் பிராவோ, முரளி விஜய், அம்பத்தி ராயுடு, சாம் பில்லிங்ஸ், ரவீந்திர ஜடேஜா என்று வலுவான பேட்டிங் வரிசையும் சென்னை அணியின் பலமாக பார்க்கப்படுகிறது.

சுழற்பந்து வீச்சில் 37 வயதான ஹர்பஜன்சிங், 39 வயதான இம்ரான் தாஹிர் ஆகியோரைத்தான் சார்ந்து இருக்க வேண்டியுள்ளது. அணியில் இடம் பெற்றுள்ள 24 வீரர்களில் 11 பேர் 30 வயதை கடந்தவர்கள். இது சென்னை 'சூப்பர்' கிங்ஸா அல்லது சென்னை 'சீனியர்' கிங்ஸா என்று ரசிகர்கள் சமூக வலைதளங்களில் கிண்டல் செய்கிறார் கள். 'ஐ.பி.எல்.இல் நாங்கள் என்றுமே கிங்தான்' என்பதை நிரூபிக்கும் உத்வேகத்தில் சென்னை அணி நாளை தனது பயணத்தைத் தொடங்குகிறது.

ஒவ்வொரு ஐ.பி.எல். தொடரிலும் செயல்பாடு: 2008-2ஆவது இடம், 2009 - அரைஇறுதி, 2010- சம்பியன், 2011- சம்பியன், 2012-2ஆவது இடம், 2013 - 2ஆவது இடம், 2014-பிளே-ஓப், 2015-2ஆவது இடம்.

### மும்பை இந்தியன்ஸ்

**கப்டன்: ரோகித் சர்மா, பயிற்சியாளர்: மஹேல ஜெயவர்த்தன**

மூன்று முறை ஐ.பி.எல். கோப்பையை வென்ற ஒரே அணியாக மும்பை இந்தியன்ஸ் திகழ்கிறது. இதுவரை 91 ஆட்டங்களில் வெற்றி கண்டுள்ள அந்த அணி இந்த சீசனில், 100 வெற்றிகளை குவித்த முதல் அணி என்ற சாதனையைப் படைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குணால் பாண்ட்யா, ஹர்திக் பாண்ட்யா, பொல்லார்ட் ஆகிய சகல துறை வீரர்கள் அந்த அணியின் தூண்கள் ஆவர்.

இவர்களோடு கப்டன் ரோகித் சர்மா, வேகப் பந்து வீச்சில் ஜஸ்பிரித் பும்ரா, முஸ்தாபிஜுர் ரகுமான், மெக்லெனஹான், கம்மின்ஸ் ஆகியோர் வலுசேர்க் கிறார்கள். ஆனால் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பிரதான சுழற்பந்து வீச்சு படை இல்லை.

இந்த வகையில் அனுகுல் ராய், அகில தனஞ்ஜெய, மயங்க் மார்கண்டே போன்றோரைத் தான் நம்பி இருக்கிறது. இதே போல் விக்கெட் கீப்பர்களில் இஷான் கின், ஆதித்ய தாரே ஆகியோர் பேட்டிங்கில் சராசரியாகவே இருக்கிறார்கள். இவை எல்லாம் அந்த அணியின் பலவீனமாகக் கருதப்படுகிறது.

ஐ.பி.எல்.இல் செயல்பாடு: 2008 -லீக் சுற்று, 2009 - லீக் சுற்று, 2010 - 2ஆவது இடம், 2011 -பிளே- ஒப் சுற்று, 2012 - பிளே - ஒப் சுற்று, 2013 - சம்பியன், 2014 - பிளே - ஒப் சுற்று, 2015 - சம்பியன், 2016 - லீக் சுற்று, 2017 - சம்பியன்.

### பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ்




**கப்டன்: விராட் கோலி, பயிற்சியாளர்: டேனியல் வெட்டோரி**

கடந்த ஆண்டு 14 ஆட்டங்களில் 3 இல் மட்டுமே வெற்றி பெற்று கடைசி இடத்துக்கு தள்ளப்பட்ட பெங்களூரு அணி இந்தமுறை நிச்சயம் எழுச்சி பெறும் வகையில் விளையாடும். தலைச்சிறந்த வீரர்கள் இருந்த போதிலும் அந்த அணிக்கு இன்னும் ஐ.பி.எல். மகுடம் கிட்டவில்லை. சமீபத்தில் நடந்த முத் தரப்பு தொடரில் ஓய்வு எடுத்து விட்டு புத் துணர்ச்சியுடன் திரும்பியுள்ள கப்டன் விராட் ஹோக்லி, மைதானத்தின் நாலாபுறமும் பந்தை விரட்டுவதில் கில்லாடியான டிவில்லியர்ஸ், இளம் வீரர் சர்ப்ராஸ் கான், கோரி அண்டர்சன், பிரன்டன் மெக்கல்லம், குயின்டான் டிகொக் என்று அதிரடி பேட்ஸ்மேன்களுக்கு பஞ்சமில்லை. இதே போல் யுஸ்வேந்திர சாஹல், வோஷிங்டன் சுந்தர், மொயீன் அலி என்று சாதுர்யமாக பவுலிங் செய்யும் சுழற்பந்து வீச்சாளர்களும் அங்கம் வகிக்கிறார்கள்.

சென்ற ஆண்டு பேட்டிங் மற்றும் பந்து வீச்சு இரண்டும் ஒரு சேர 'கிளிக்' ஆகாததால் தடுமாற்றம் கண்டது. இந்த முறை அவற்றை திருத்திக் கொண்டால் ஏறுமுகத்தை பார்க்கலாம்.

2008 - லீக் சுற்று, 2009 - 2 ஆவது இடம், 2010 - பிளே - ஓப், 2011 - 2ஆவது இடம், 2012 - லீக் சுற்று, 2013 - லீக் சுற்று, 2014-லீக் சுற்று, 2015- பிளே - ஓப் சுற்று, 2016 - 2ஆவது இடம், 2017 - லீக் சுற்று.

### கொல்கத்தா நைட் ரைடர்ஸ்

**கப்டன்: தினேஷ் கார்த்திக், பயிற்சியாளர்: காலிஸ்**

2 முறை கோப்பையை வென்றுத் தந்த கவுதம் கம்பீரை கழற்றி விட்ட கொல்கத்தா அணி நிர்வாகம் தமிழகத்தை சேர்ந்த விக்கெட் கீப்பர் தினேஷ் கார்த்திக்கை கப்டனாக்கி இருக்கிறது. கொல்கத்தா அணியின் பலமே சிக்கனமாக பந்து வீசக்கூடிய சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரேன் தான். தொடக்க வீரராக பேட்டிங்கும் செய்யக் கூடியவர். பாகிஸ்தான் சூப்பர் லீக்கில் அவரது பந்து வீச்சில் சந்தேகம் கிளம்பியதால் இங்கு கவனமாக பந்து வீச வேண்டிய நெருக்கடியில் இருக்கிறார். ஏற்கனவே காயத்தால் மிட்செல் ஸ்டார்க் 'ஜகா' வாங்கிய நிலையில், காயத்தில் இருந்து ஓரளவு மீண்டு வந்துள்ள அதிரடி சூரர்கள் கிறிஸ்லின், ஆந்த்ரே ரஸ்செல் ஆகியோர் மறுபடியும் காயமடைந்தால் கொல்கத்தாவுக்கு சிக்கல் தான்.

கொல்கத்தா அணி ஐ.பி.எல். போட்டியில் 63 சதவீதம் வெற்றியை உள்ளூரில் தான் பெற்றிருக்கிறது. அதில் தான் அவர்கள் கூடுதல் கவனம் செலுத்துகிறார்கள். ஜூனியர் உலக கோப்பை யில் கலக்கிய சுப்மான் கில், நாகர்கோட்டி, ஷிவம் மாவி உள்ளிட்டோரை, இந்த மின்னல் வேக போட்டியில் சரியாகப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும்.

2008 - லீக் சுற்று, 2009 - லீக், 2010 - லீக், 2011 - பிளே - ஓப் சுற்று, 2012 - சம்பியன், 2013 - லீக் சுற்று, 2014 - சம்பியன், 2015 - லீக், 2016 - பிளே - ஓப், 2017 - பிளே ஓப்.

### கிங்ஸ் லெவன் பஞ்சாப்

**கப்டன்: அஸ்வின், பயிற்சியாளர்: பிராட் ஹாட்ஜ்**

பஞ்சாப் அணி தங்களது 11ஆவது கப்டனாக தமிழகத்தை சேர்ந்த மூத்த சுழற்பந்து வீச்சாளர் அஸ்வினை நியமித்து இருக்கிறது. இந்த சீசனில் கப்டன் பதவி வகிக்கும் ஒரே பவுலர் இவர் தான். அடிப்படை விலையான ரூ.2 கோடிக்கு விலை போன கிறிஸ் கெய்ல், யுவராஜ் சிங் இருவரும் ருத்ரதாண்டவம் ஆடினால் எதிரணிகள் பஞ்சராகி விடும். ஆனால் 'போர்ம்' இன்றி தவிக்கும் அவர்கள் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்துவது கேள்விக்குறி தான். ஆரோன் பிஞ்ச், லோகேஷ் ராகுல், கருண் நாயர், டேவிட் மில்லர், ஸ்டோனிஸ், இந்த சீச னில் இந்தியாவின் முதல்தர போட்டியில் அதிக ரன்கள் குவித்தவரான மயங்க் அகர்வால் என்று பேட்டிங் படையில் தொய்வு இருப்பது போல் தெரியவில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க...)



காலைக்கதிர் Kalaikkathir



# தாகம் தணிக்க தண்ணீர் கிடைக்குமா?

'பேராசை பெருநஷ்டம்' என்பார்கள். அதை தனது ஒவ்வொரு செயலின் மூலமும் நிரூபித்துக்கொண்டேயிருக்கிறான் மனிதன். தனது செயலால் ஏற்படும் தவறுக்காக தண்டனை பெற்றுக்கொண்டேயிருந்தாலும், அந்த அனுபவத்தில் இருந்து பாடம் கற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. விளைவு, பக்கவாதத்தில் படுத்துக்கிடக்கிறது பருவ நிலை. நிர்வாணமாக கிடக்கின்றன நீர்நிலைகள். தண்ணீர் ஓடிக்கொண்டிருந்த ஆறுகளில் எல்லாம் தற்போது ஆயிரக்கணக்கான லொறிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. தாயின் மார்பை அறுத்து பால் குடிப்பதைப் போல், ஊற்றுகளை உள்வாங்கி வைத்திருக்கும் ஆற்று மணலை கொள்ளையடித்துக் கொண்டேயிருக்கிறோம். வகைதொகையில்லாமல் மார்பை அறுத்தெறிந்து விட்டு, தற்போது பசிக்கிறதே, தவிக்கிறதே எனக் கதறி என்ன பயன்?

**பாலை விட தண்ணீரின் விலை அதிகம்**

நீரோட்டத்தின் உயிரோட்டமாக இருப்பவை மலைகளும், மணலும் தான். இரண்டையும் அழித்துக் கொண்டே இருக்கிறோம். அதனால் நீரோட்டமும் அழிந்துகொண்டேயிருக்கிறது. வீடுகள் தோறும் திண்ணைகளும், சாலைகள் தோறும் தண்ணீர் பந்தல்களையும் அமைத்து, வழிப்போக்கர்களின் தாகத்தை தணித்த பாரம்பரியம் தமிழருடையது. ஆனால், இன்று நாக்கு வறண்டு போனால் கூட சொட்டுத் தண்ணீர் கொடுக்க யோசிக்கிறார்கள். காரணம், இன்றைக்கு பாலை விட தண்ணீரின் விலை அதிகம்.



தண்ணீர். இயற்கை உயிரினங்களுக்கு அளித்த வரம். தண்ணீர் இல்லாமல் இங்கு எதுவுமேயில்லை. அத்தனை அவசியமான ஒன்றை, நாம் எத்தனை கவனமாகக் கையாள வேண்டும்? இருக்கும்போது இஷ்டம் போல் செலவழித்து விட்டோம். தற்போது பற்றாக்குறை தொடங்கியிருக்கிறது. இயற்கை வரமாக அளித்த நீருக்கு தற்போது விலை வைத்து விற்கத் தொடங்கிவிட்டோம். அப்போதே நாம் விழித்திருக்க வேண்டாமா?

இனியாவது நாம் விழித்துக்கொள்ள வேண்டும். இப்போது இல்லையென்றால் இனி எப்போதும் இல்லை என்ற நிலையில் இருக்கிறது பூவுலகு. ஒரு நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டால்கூட ஓரளவு தாக்குப்பிடித்து விடுவார்கள். ஆனால், தண்ணீர் பஞ்சம் வந்தால் வாழவே முடியாது. உலகளவில் தண்ணீர்தான் தற்போது பெரும் பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது.

**நீர்வளம் இல்லாத 8 நாடுகள்**

உலகின் 8 நாடுகள் நீர்வளம் இல்லாத நாடுகள் என அறிவிக்கப்பட்டுவிட்டன. 81 நாடுகள் எந்த நிமிடத்திலும் நீர்வளம் இல்லாத நாடுகளாக மாறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்றும் அறிவித்திருக்கிறார்கள் இங்கிலாந்தைச் சேர்ந்த நீரியல் ஆய்வாளர்கள். ஓரளவு நீர்வளம் உள்ள நாடுகளின் பட்டியலில் 107 ஆவது இடத்தில் இருக்கிறது இந்தியா.

ஒரு மனிதனின் சராசரி தண்ணீர் தேவை தினமும் 140 லீற்றர் என்கிறார்கள். ஆனால் 2050 ஆம் ஆண்டில் சராசரியாக ஒரு மனிதனுக்கு தினமும் 50 லீற்றர் தண்ணீர்தான் கிடைக்கும் என ஐ.நா. சில ஆண்டுகளுக்கு முன்பாக அறிவித்தது. ஆனால், இன்றைய திகதியில் இந்தியாவில் ஒரு மனிதனுக்கு கிடைக்கும் சராசரி தண்ணீரின் அளவு 27 லீற்றர்தான். இப்போதே இப்படி என்றால் 2050 இல் என்ன நடக்கும் என்பதை யூகிக்கவே முடியவில்லை.

இன்னும் சில ஆண்டுகளில் தங்கத்தின் விலையை விட தண்ணீரின் விலை அதிகமாகப் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏன் இந்த நிலை? தண்ணீரின் மதிப்பை நாம் முழுவதுமாக உணராமல் செய்த பிழை தான் இத்தனைக்கும் அடிப்படை.



தமிழகத்திற்கு ஓர் ஆண்டுக்கு 54 ஆயிரத்து 725 மில்லியன் கனலீற்றர் தண்ணீர் தேவை. ஆனால், தற்போது 46 ஆயிரத்து 540 மில்லியன் கன லீற்றர்தான் கிடைக்கிறது. இதுவும் ஆண்டுக்கு ஆண்டு சரிந்துகொண்டே போவதுதான் வேதனை. பெய்யும் மழைநீரை நாம் முறையாகச் சேமிக்காமல் விட்டதும், இயற்கை வளங்களை அழித்தொழித்துக்கொண்டே இருப்பதும்தான் மழை குறையக்காரணம். பெய்யும் மழைநீரில் 40 சதவிகிதம் நிலத்தில் ஓடி, கடலில் கலக்கிறது. 35 சதவிகிதம் வெயிலில் ஆவியாகி விடுகிறது. 15 சதவிகிதம் பூமி உறிஞ்சிக் கொள்கிறது. 10 சதவிகிதம் மண்ணை ஈரமாக்குகிறது. ஆக, வீணாக ஓடும் தண்ணீரைச் சேமித்து வைத்தாலே தண்ணீர் தட்டுப்பாட்டை ஓரளவு சமாளித்து விடலாம்.

பக்கவாதத்தால் படுத்து முடங்கிக் கிடக்கின்றது பருவ நிலை...!



உலகில் நீர்வளம் இல்லாத நாடுகள் – 08
நீர்வளம் இல்லாமல் போகும் நாடுகள் – 81



**ரேசன் கார்ட்டுக்குத் தண்ணீர்**

மழைநீரை முறையாகச் சேமித்து பயன்படுத்தினால் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை சுலபமாக சமாளித்துவிட முடியும். ஆனால், மழைநீர் சேமிப்பில் அரசுக்கும் அக்கறையில்லை, மக்களுக்கும் அக்கறையில்லை. தும்பை விட்டு வாலை பிடிக்கும் நமது பழக்கம் இதிலும் தொடர்கிறது. உலகில் தண்ணீரே இல்லாத ஒரு நகரம் அறிவிக்கப்பட்டுவிட்டது. தென் ஆபிரிக்காவின் 'கேப்டவுன்' நகரம் 'ஜீரோ டே' என்ற சொட்டு தண்ணீர் இல்லாத நாளை எதிர்நோக்கி இருக்கிறது. இனிமேல் அங்கு ஒரு நபருக்கு 25 லீற்றருக்கு மேல் தண்ணீர் கிடைக்காது. தண்ணீர் விநியோகத்திற்காக சிறப்பு ரேசன் கடைகள் திறக்கப்படுகின்றன. அந்த நிலை இன்னும் சில மாதங்களில் உலகின் 26 நகரங்களுக்கு ஏற்படும் என ஆய்வுகள் எச்சரிக்கின்றன. அதில் இந்தியாவின் சில நகரங்களும் இடம் பெற்றுள்ளன என்பது அதிர்ச்சியான உண்மை.

இதுவரை போனது போகட்டும். இன்றில் இருந்தாவது தண்ணீரின் அருமை உணர்ந்து அதைச் சேமிக்கும் நடவடிக்கையில் நாம் இறங்க வேண்டும். இது சரியான தருணம். இந்தக் கோடையில் வீடுகளில் மழைநீர் சேமிப்பு முறைகளை அமைத்து விட்டால், அடுத்துவரும் மழை மாதங்களில், நமக்குத் தேவையான தண்ணீரை, யாரையும் எதிர்பார்க்காமல் நாம் பெற முடியும். ஒரு குடும்பத்துக்கு தேவையான தண்ணீரை அந்தக் குடும்பமே இயற்கையிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியும். 100 சதுர மீற்றர் பரப்புள்ள மொட்டை மாடியில் இருந்து ஆண்டுக்கு 61,600 லீற்றர் தண்ணீரைச் சேமிக்க முடியும் என்கிறது பொதுப் பணித்துறை.

மழைநீர் சேமிப்பு கட்டமைப்புகளை, அமைக்க எங்களிடம் வசதியில்லை என நினைப்பவர்களும் மழைநீரை சேமிக்க ஒரு வழியிருக்கிறது. வீட்டு



மொட்டைமாடி அல்லது வெட்வெளியில் நான்கு மூலைகளில் குச்சிகளை கட்டி, அதில் ஒரு வெள்ளை வேஷ்டியை கட்டிவிட வேண்டும். அந்த வேஷ்டியின் மத்தியில் ஒரு கல்லை வைத்தால், நடுப்பகுதி குழியாக மாறி புனல் போல் இருக்கும். அந்த புனல் பகுதிக்கு கீழே பாத்திரங்களை வைத்து மழைநீரை சேமிக்கலாம். மழைநீரைச் சேமிக்கும் ஆர்வம் இருந்தால் போதும், ஆயிரம் வழிகள் இருக்கின்றன. நாமும் மண்ணெண்ணெய் ரேசன்கடைகளில் வரிசையில் நிற்பதைப் போல, தண்ணீருக்காகவும் நிற்கும் காலம் வந்தேவிட்டது. இது விழித்துக்கொள்ள வேண்டிய நேரம்; இனியும் தாமதித்தால் நஷ்டம் நமக்குத்தான்.

"ஒரு மனிதனின் சராசரி தண்ணீர் தேவை தினமும் 140 லீற்றர் என்கிறார்கள். ஆனால் 2050 ஆம் ஆண்டில் சராசரியாக ஒரு மனிதனுக்கு தினமும் 50 லீற்றர் தண்ணீர்தான் கிடைக்கும் என ஐ.நா. சில ஆண்டுகளுக்கு முன்பாக அறிவித்தது. ஆனால், இன்றைய திகதியில் இந்தியாவில் ஒரு மனிதனுக்கு கிடைக்கும் சராசரி தண்ணீரின் அளவு 27 லீற்றர்தான். இப்போதே இப்படி என்றால் 2050 இல் என்ன நடக்கும் என்பதை யூகிக்கவே முடியவில்லை."

நன்றி : விகடன்

# அமைச்சரவையிலிருந்து விலகப் போவதில்லை: சுதந்திரக் கட்சி 13 அமைச்சர்களும் பிடிவாதம்!

கொழும்பு, ஏப். 06

அமைச்சரவையிலிருந்து விலகப் போவதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நேற்றுமுன்தினம் நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது வாக்களித்த போதிலும், அமைச்சரவையிலிருந்து விலகப்போவதில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 13 அமைச்சர்கள் இது பற்றி நேற்று முன்தினம் இரவு தீர்மானித்துள்ளனர். அரசில் தொடர்ந்தும் நீடித்திருக்கப் போகிறோம் எனத் தெரிவித்துள்ளனர்.

எஸ்.பி. திஸாநாயக்க, தயாசிறி ஜயசேகர, அனுர பிரியதர்சன யாப்பா, ஜோன் செனவிரத்ன, சுசில் பிரேம ஜயந்த, லக்ஷ்மன் யாப்பா, டிலான் பெரேரா, சந்திம வீரக்கொடி, அனுராத ஜயரட்ண, சுசந்த புஞ்சிநிலமே, சுதர்சனி பெர்னாண்டோ புள்ளே, சுமேதா ஜயசேன மற்றும் தரானாத் பஸ்நாயக்க ஆகிய அமைச்சர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் நாடாளுமன்றில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கருத்து வெளியிட்டிருந்தனர்.

நல்லாட்சி அரசு ஜனாதிபதி மைத்திரிபாலவினது எனவும், ஜனாதிபதியின் ஆட்சியின்கீழ் அமைச்சராக நீடிப்பதில் பிரச்சினை கிடையாது என எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பின்போது வாக்களிப்பதற்கு சகல உரிமையும் உண்டு எனவும், ஜனாதிபதி கூறும் வரையில் அமைச்சுப் பதவியில் நீடிக்க முடியும் எனவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் பிளவுகளால் நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசில் தொடர்ந்தும் நீடிப்பதில் சிக்கல் எதுவும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## லொறி விபத்தில் சாரதி படுகாயம்



கொழும்பு, ஏப். 06

மஹியங்கனை பகுதியிலிருந்து ஹற்றன் பகுதிக்கு 3 கியூப் மணல் ஏற்றிச்சென்ற லொறி ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

நுவரெலியா – ஹற்றன் பிரதான வீதியில் நானுஓயா குறுக்கு வீதியில் இந்த லொறி வீதியை விட்டு விலகி மண்மேட்டில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம், நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றது என நானுஓயா போக்குவரத்து பொலிஸார் கூறியுள்ளனர்.

லொறி சாரதி லொறியின் வேகத்தைக் கட்டுப்படுத்த முயன்றபோது கட்டுப்பாட்டுக்கு அப்பால் லொறி வீதியை விட்டு விலகி விபத்துக் குள்ளாகியுள்ளது.

லொறியில் சாரதி மட்டுமே பயணித்துள்ளார் எனவும், அவர் பலத்த காயங்களுக்குள்ளாகி நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காட்டிக்கொடுத்துவிட்டார் மைத்திரி; டுவிட்டரில் நாமல் எம்.பி. விமர்சனம்

கொழும்பு, ஏப். 06

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் காட்டிக் கொடுக்கும் பழக்கத்தை நேற்றுமுன்தினம் மறுபடியும் உறுதிப்படுத்தியுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்றுமுன்தினம் 46 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

இது தொடர்பில் தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டிருக்கும் நாமல் ராஜபக்ஷ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கடுமையாக விமர்சித்துள்ளார்.




ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் காட்டிக் கொடுக்கும் பழக்கத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் ஊடாக மறுபடியும் நிரூபித்து விட்டார். இந்தப் பிரேரணைக்கு ஒத்துழைக்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை தூண்டிவிட்டு பின்னர் தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி மாற்றிக்கொண்டார். ஐக்கிய தேசியக் கட்சியையும், சுதந்திரக் கட்சியையும் ஜனாதிபதி காட்டிக்கொடுத்துவிட்டார் என்றுநாமல்எம்.பி.கூறியுள்ளார்.

### *பிளாஸ்டிக் கழிவகற்றலில்*

## கடற்படையினரின் புதிய வழிமுறை!





முல்லைத்தீவு, ஏப். 06

பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் ஆகிய பொருள்களுக்கான புதிய மீள்சுழற்சி செயல்முறை ஒன்றை இலங்கை கடற்படையினர் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

கழிவு முகாமைத்துவத்திற்கு சிறந்த தீர்வை பெற்றுக் கொடுக்கும் வகையில் கடற்படையின் கடல்சார் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினால் மூன்று கட்டங்களை உள்ளடக்கியதாக இந்தப் புதிய முறையை உருவாக்கியுள்ளனர்.

முதற்கட்டத்தில் பூந்தோட்ட அலங்காரங்களுக்காக அலங்காரப் பொருள்களான பூச்சாடிகள், வேலிக் கம்பங்கள் ஆகியன வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

கடற்படையினரின் இரண்டாம் கட்ட நடவடிக்கையாக கடற்படை நலன்புரி திட்டத்தின் ஊடாக நாடளாவிய ரீதியில் புதிய தொழில்நுட்பத்தை பகிர்ந்துகொள்ளல், அதனை விரிவுபடுத்தல் மற்றும் முறையான கழிவகற்றல் ஆகிய நடவடிக்கையின் மூலம் அதனை பயன்மிக்க ஒரு சிறந்த வளமாகப் பயன்படுத்தல்.

மூன்றாம் கட்டச் செயற்பாட்டை கடற்படை ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திக்கான பிரிவின் உதவியுடன் முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

## 1,300 ஆண்டுகள் பழைமையான கல்வெட்டு ஒன்று கண்டுபிடிப்பு!



கொழும்பு, ஏப். 06

இலங்கையில் 1,300 ஆண்டு பழைமையான கல்வெட்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரம் – உத்தரசலிய ஸ்ரீ தலதா விகாரையில் இந்த கல்வெட்டு கிடைத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

8 ஏக்கர் வயல் ஒன்றில் பிக்கு மடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக பூஜை நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் இந்தக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் ஆராய்ச்சி பிரிவின் பேராசிரியர் கருணாசேன ஹெட்டியாராச்சி உறுதி செய்துள்ளார்.

## ஜேர்மன் பிரஜை மீது துப்பாக்கிப் பிரயோகம்

கொழும்பு, ஏப். 06

கொஸ்கொட பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஜேர்மன் பிரஜை ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூடு நேற்றிரவு 9 மணியளவில் கொஸ்கொட பகுதியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு அருகில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த ஜேர்மன் பிரஜை நாகொட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர், இந்த ஜேர்மன் பிரஜை மீதும் அவரின் வர்த்தக பங்குதாரர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

சம்பவத்தை அடுத்து துப்பாக்கிதாரிகள் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் அவர்களை கைது செய்ய விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஐ.பி.எல் திருவிழா நாளை ஆரம்பம்

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் இறுதிக்கட்டத்தில் கச்சிதமாக பந்து வீசக்கூடிய பவுலர்கள் இல்லை. தற்போது எடுக்கப்பட்டுள்ள ஆஸ்திரேலியாவின் ஆண்ட்ரூ டையை தான் அந்த அணி மலைபோல் நம்பி இருக்கிறது.

2008-அரைஇறுதி, 2009-லீக் சுற்று, 2010-லீக், 2011- லீக், 2012-லீக், 2013-லீக், 2014-2 ஆவது இடம், 2015-லீக், 2016-லீக், 2017-லீக்

## டில்லி டேர்டெவில்ஸ்

**கப்டன்: கம்பீர், பயிற்சியாளர்: பொண்டிங்**

ஐ.பி.எல். வரலாற்றில் அதிக தோல்விகளை சந்தித்த அணி (82 தோல்வி), இறுதிப்போட்டிக்கு முன்னேறாத ஒரே அணி டில்லி டேர்டெவில்ஸ்தான். கவுதம் கம்பீர் மீண்டும் சொந்த ஊர் அணிக்குத் திரும்பியதுடன், அணியை வழிநடத்தும் கவுரவத்தையும் பெற்றிருக்கிறார். பயிற்சியாளர் ரிக்கி பொண்டிங் இருப்பது அந்த அணிக்கு இன்னொரு சாதகமான அம்சமாகும். இந்தக் கூட்டணி, டில்லியை துரத்தும் துரதிர்ஷ்டத்தில் இருந்து மீட்டெடுப்பார்களா? என்ற எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது.



20 ஓவர் கிரிக்கெட்டில் பட்டையை கிளப்பும் மேக்ஸ் வெல், காலின் முன்ரோ, சகலதுறை வீரர் கிறிஸ் மோரிஸ், இந்திய இளம் வீரர்கள் ரிஷாப் பான்ட், ஸ்ரே யாஸ் அய்யர் ஆகியோர் டில்லி அணியின் துருப்புச் சீட் டுகளாக பார்க்கப்படுகிறார்கள். ஆனால் 4 வெளிநாட்டு வீரரை மட் டுமே இறக்க முடியும் என்பதால் முன்னணி பவுலர்கள் ரபடா, டிரென்ட் பவுல்ட் ஆகியோரில் ஒருவருக்கு தான் வாய்ப்புக் கிடைக்கும். இதே போல் வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி காயத்தால் அவதிப்படுவது டில்லி அணிக்கு கவலைக்குரிய விடயமாகும்.

2008- அரைஇறுதி, 2009 - அரைஇறுதி, 2010 - லீக், 2011 - லீக், 201 - பிளே - ஓப், 2013 - லீக், 2014 - லீக், 2015 - லீக், 2016 - லீக், 2017 - லீக்

## ஐதராபாத் சன்ரைசர்ஸ்

**கப்டன்: வில்லியம்சன், பயிற்சியாளர்: டொம் மூடி**

ஆஸ்திரேலிய அதிரடி ஆட்டக்காரர் டேவிட் வோர்னர் தான் ஐதராபாத் அணியின் ஆணிவேராக இருந்தார். அவரும், ஷிகர் தவானும் தொடக்க ஆட்டக்காரர்களாக எடுக்கும் ரன்களே அந்த அணியின் வெற்றி வாய்ப்பில் முக்கிய பங்கு வகித்தது. பந்தை சேதப்படுத்திய பிரச்சினையில் வோர்னருக்குத் தடை விதிக்கப்பட்டிருப்பது ஐதராபாத் அணிக்கு பெரும் பின்னடைவு என்பதில் சந்தேகம் இல்லை.

வோர்னருக்கு பதிலாக வில்லியம்சன் ஐதராபாத் அணியின் கப்டனாக பணியாற்ற உள்ளார். ஆனாலும் பேட்டிங்கில் ஷிகர் தவான், மனிஷ் பாண்டே, பிராத்வெய்ட், அலெக்ஸ் ஹாலெஸ், யூசுப் பதான், ஷகிப் அல் - ஹசன், சமீபத்தில் கிளப் கிரிக்கெட் டில் 20 பந்துகளில் சதம் நொறுக்கிய விருத்திமான் சஹா ஆகியோரும், துல்லியமான பந்து வீச்சின் மூலம் மிரட்டக்கூடிய வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர்குமார், சுழற்பந்து வீச்சாளர் ரஷித் தான் உள்ளிட்டோரும் அந்த அணிக்கு நம்பிக்கை நட்சத்திரங்களாகத் தெரிகிறார்கள்.

2013 - பிளே - ஓப், 2014 - லீக், 2015 - லீக், 2016- சம்பியன், 2017- பிளே- ஓப்

## ராஜஸ்தான் றோயல்ஸ்

**கப்டன்: ரஹானே, பயிற்சியாளர்: பட்டி உப்டன்**

ஸ்டீவன் ஸ்மித் பெற்ற தடை, ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு விழுந்த பெருத்த அடியாகும். அவருக்கு பதிலாக இப்போது ரஹானே கப்டன் பதவியை அலங்கரிக்கிறார். ரூ.12.5 கோடிக்கு ஏலம் போன சகலதுறை வீரர் பென் ஸ்டோக்ஸ், ரூ.11.5 கோடிக்கு விலை போன வேகப்பந்து வீச்சாளர் ஜெய்தேவ் உனட்கட், ஜோப்ரா ஆர்ச்சர், பென் லாக்லின், அங்கித் ஷர்மா, தவால் குல்கர்னி, கிருஷ்ணப்பா கவுதம் என்று பந்து வீச்சில் ராஜஸ்தான் ஓரளவு வலுவாகவே காணப்படுகிறது. ஆனால் ரஹானே, பென் ஸ்டோக்ஸ், ஜோஸ் பட்லர் தவிர பேட்டிங்கில் அனுபவசாலிகள் அதிகம் பேர் இல்லாத குறையை சரி செய்ய வேண்டியதே ராஜஸ்தானுக்கு உள்ள மிகப்பெரிய சவாலாகும்.

2008-சம்பியன், 2009-லீக் சுற்று, 2010-லீக், 2011-லீக், 2012-லீக், 2013-பிளே-ஓப், 2014-லீக் சுற்று, 2015-பிளே-ஓப்.



வடமாகாண கிராம அபி விருத்தி திணைக்களத்திற்கு கீழ் புதிய தையல் போதனாசிரியர்கள் ஐவருக்கான நியமனக் கடிதங்களை வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே நேற்று வழங்கினார்.

யாழ் சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் காலை 8.30 மணியளவில் நடைபெற்ற நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் பத்திநாதன் முதலமைச்சரின் அமைச்சு செயலாளர் ரூபினி வரதலிங்கம் கிராம அபிவிருத்தி திணைக்கள பதில் பணிப்பாளர் நளாயினி இன்பராஜ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (இ









டென்மார்க் நாட்டில் இருந்து வாணி தனேஷ் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கும் வாணி சமூக பொருளாதார சுய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் வறுமையிலும் தமது கல்விகளைத் தொடரும் பதினொரு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கு பாடசாலை செல்வதற்கு சைக்கிள்களை வழங்கியுள்ளனர்.

கிளிநொச்சி மாவடியம்மான் கிராமத்தில் எட்டு சைக்கிள்களும் மற்றும் கிளிநொச்சியின் வட்டக்கச்சி, இராமநாதபுரம், தொண்டமான்நகர் பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு ஒவ்வொரு சைக்கிளுமாக மூன்று சைக்கிள்களும் வழங்கப்பட்டுள்ளன.

அதேசமயம் இராமநாதபுரம் மற்றும் உதயநகர் பகுதியில் வசிக்கும் இரண்டு பெண் தலைமைத்துவக்குடும்பங்களுக்கு வாழ்வாதரத்திற்கு தலா ஐம்பதாயிரம் பெறு மதியில் கோழிக் கூடு மற்றும் முட்டைக் கோழிகளும் சமூக பொருளாதார சுயமேம்பாட்டு நிறுவனத்தின் செயற்பாட்டாளர்களால் வழங்கப்பட்டுள்ளன.

இந்த சமூக பொருளாதார சுய மேம்பாட்டு நிறுவனம் தாயகத்தின் வாழ்வாதர மற்றும் கல்வி தொடர்பான பல பணிகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ





வட்டுக்கோட்டை காார்த்திகேய வித்தியாசாலை மாணவர்களின் சின்னம் சூட்டும் வைபவத்தில் வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் சிற்றம்பலம் ஸ்ரீஜீவா அதிதியாகக் கலந்து கொண்டு சின்னம் சூட்டுகின்றார். மாணவர்களுடன் அதிபரும் காணப்படுகிறார். (இ

### பிரதமருக்கு எதிரான பிரேரணை தோல்வி;

# வெற்றிக் களிப்பில் ஈடுபட்ட மூவர் காயம்

கொழும்பு, ஏப். 06

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மேலதிக 46 வாக்குகளால் வெற்றிபெற்றதை அடுத்து வெற்றிக் களிப்பில் ஈடுபட்ட மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் புத்தளம் - முந்தல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றிருக்கிறது. மோட்டார் சைக்கிள் ஒன்றும் கார் ஒன்றும் மோதியதில் இந்த விபத்து நேர்ந்தது எனப்பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்த மூவரில் இருவர் சிலாபம் வைத்தியசாலையிலும், ஒருவர் உடப்பு வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆராய்ச்சிக்கட்டு பிரதேச சபையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவரது ஏற்பாட்டில் இடம்பெற்ற வெற்றிக் களிப்பின் போது இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

## வினாத்தாள் 26 பகுதி II இன் தொடர்ச்சி...

11) பின்வருவனவற்றிற்கு பொருத்தமான விடையை ஆங்கிலத்தில் எழுதுக

This is a ............................ 

12) "சூரியன்" என்பதற்குரிய ஆங்கிலச் சொல்லை எழுதுக

13) பின்வரும் வாக்கியத்தைத் தமிழில் எழுதுக

I. Shall we go to temple? ............................

II. Please be silent.........................................

14) இதன் கருத்தைதமிழில் எழுதுக

I. எளவழு ................................

II. ஒருவ ............................

- சரியான விடையின் கீழ் கோடிடுக

15) இலங்கைக்கே உரித்தான முலையூட்டியினுள் அடங்காதது

1.மரநாய்

2.கருங்குரங்கு

3.சுண்டெலி

4.நரைப்புழுனி

16) ஆணிவேரில் உணவைச் சேமித்துவைக்கும் தாவரம் அல்லாதது


1.பீற்றூட்

2.கரட்

3.மரவள்ளி

4.முள்ளங்கி





# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் **26**

தரம்-5

பகுதி - II

- பின்வரும் பந்தியை வாசித்து விடைதருக

1)

| |
|---|
| நாங்கள் எல்லோரும் கல்விச் சுற்றுலாவின் போது குதூகலத்துடன் பாடிக் கொண்டே சென்றோம். பேருந்து சிறிது தூரம் சென்றதும், மலைக்குன்றுகள் அங்கும் இங்கும் தெரியத் தொடங்கின. "வரக்காப்பொல" என்ற இடத்தை அடைந்ததும் பெரியமலைத்தொடர்களைக் காணக்கூடியதாக இருந்தது. நாங்கள் முதலில் இறப்பர் தொழிற்சாலைக்கு சென்றோம். அங்கே மரங்களில் இருந்து |

I. எந்த இடத்தில் அவர்கள் மலைத்தொடர்களைக் கண்டனர்

........................................................................................................

II. தன்மை பன்மை வினைச்சொல் ஒன்றைஎழுதுக

........................................................................................................

III. தொழிற்சாலை என்னும் தனிச்சொல்லால் குறிப்பிடப்படுவது?

........................................................................................................

IV. மேலுள்ள பந்தியில் காணப்படும் அடைமொழி ஒன்றை தருக

........................................................................................................

V. "வியப்பாக" என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக

........................................................................................................

VI. "பெரியமலைத்தொடர்" என்பதை பிரித்து எழுதுக

........................................................................................................

2) அடைப்பினுள் உள்ள பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக

I. மாகாணத்தை நிர்வகிப்பவர் ..................................................

(ஆளுநர்,ஆழுநர் )

II. சனக்கூட்டம் மெல்லமெல்லக் கலையத் ..............................

(தொடங்கியது,தொடங்கின )

III. சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்டமான் ஓடி ..............................

(ஒழிந்தது,ஒளிந்தது)

3) பின்வரும் சொற்களிலுள்ள உயிர்க்குறிகளை எழுதுக

I. பாலம் :..................................................

II. நுங்கு :..................................................

4) பின்வரும் சொற்களின் ஒத்தகருத்துச் சொல்லைத் தெரிவுசெய்க

I. துயில் - (நித்திரை/குளவி/கங்குல் )

II. ஈகை – ( தானம் /பிள்ளை/பனுவல்)

5) பின்வரும் வாக்கியத்தைப் பன்மை வடிவத்திற்கு மாற்றி எழுதுக

பாதையில் பாறாங்கல் விழுந்து கிடந்தது

..........................................................................................................................



வினாத்தாள் 26 பகுதி II இன் தொடர்ச்சி...

6) தரப்பட்டுள்ள மரபுத் தொடர்களுக்கு பொருத்தமான கருத்தைத் தெரிவுசெய்க

( சொல் தவறுதல், ஏற்றுதல், பிடிவாதம், தோற்றப்பொலிவு )

I. குரங்குப்பிடி :..............................................................................

II. காதுக்குத்து :..............................................................................

7) கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்க்குரிய தனிச் சொல்லைஎழுதுக

I. ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் ..................................................

II. இரு பகுதியினரிடையே ஒரு விடயம் பற்றி ஏற்படும் இணக்கம்

..................................................

8) பொருத்தமான நிறுத்தல் குறியீட்டை இடுக

ஐயோ என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா

9) பின்வரும் சொற்களை "க" வரிசையில் ஒழுங்குபடுத்தி எழுதுக

1.கிழவி, காடு, கீதம், கொம்பு, குடம்

..........................................................................................................

10) பின்வரும் வாக்கியத்தில் உள்ள எழுத்துப் பிழைகளை திருத்தி எழுதுக

மரைக்கறி உணவு உடளிற்கு மிகவும் நல்லது

..........................................................................................................

காலைக்கதிர் Kalaikkathir



## 'யூ டியூப்' அலுவலகத்துக்குள் துப்பாக்கிச்சூடு நடத்திய பெண்



அமெரிக்காவில் பிரபல 'யூடி யூப்' வீடியோ பகிர்வு வலைத்தள நிறுவனத்தின் தலைமையகத்தில் பெண் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மூவர் காயமடைந்தனர். அதனைத்தொடர்ந்து அந்தப் பெண், தன்னைத்துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பெண் யூடியூப்வலைத்தளத்தில் வீடியோக்களைப் பதிவேற்றம் செய்து வந்தவர் என்றும், அவரது வீடியோ தொகுதிகளை 'யூடியூப்' நிறுவனம் இருட்டடிப்புச் செய்வதாகக்குற்றம்சாட்டி வந்த அவர், அந்தக் கோபத்தில் இந்தத் தாக்குதலை நிகழ்த்தியிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம், சான்புருனோநகரில், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் நிறைந்துள்ள 'சிலிக்கான்பள்ளத்தாக்கு' என்றழைக்கப்படும் பகுதியில், பிரபலவீடியோபகிர்வு வலைத்தளமான யூடியூப்பின் தலைமை அலுவலகம் அமைந்துள்ளது.

அந்த அலுவலகத்துக்கு செவ்வாய்க்கிழமை மதியம் ஒருமணியளவில் (உள்ளூர் நேரம்) வந்த நஸீம் அக்தாம் (வயது -38) என்ற பெண், அங்கிருந்தவர்களை நோக்கி கைத்துப்பாக்கியால் சுட்டார்.

இதில் இரண்டு பெண்கள் உட்பட 3 பேர் காயமடைந்தனர். சம்பவ இடத்திலிருந்து தப்பிச் செல்லும் முயற்சியில் மேலும் ஒருவர் காயமடைந்தார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

துப்பாக்கிச் சூடுநிகழ்த்தியநஸீம், பிறகு குண்டுக் காயத்துடன் பிணமாகக் கிடந்தார். அவர் துப்பாக்கியால் தன்னைச் சுட்டு தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், தாக்குதலில் காயமடைந்த அனைவரும், நஸீமால் குறிவைத்துத்தாக்கப்பட்டவர்கள் அல்லர் எனவும் அவர்கள் கூறினர்.

எனினும், காயமடைந்தவர்களில் ஒருவர் நஸீமுக்கு ஏற்கனவே அறிமுகமானவராக இருக்கலாம் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாக்குதல் நிகழ்த்திய நஸீம் அக்தாம் ஈரானைப் பூர்வீகமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், இந்தத் தாக்குதலுக்கு பயங்கரவாதம் காரணமல்ல எனவும், இது வெறும் உள்நாட்டு வன்முறைச் சம்பவம் மட்டுமே என்றும் பொலிஸார்தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் 36 வயது ஆணின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருக்கின்றது என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலினால் பயங்கரவாதிகள் பட்டியல் வெளியீடு

ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸில், சர்வதேச பயங்கரவாதிகள் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் பாகிஸ்தான் முக்கிய இடம்பிடித்துள்ளது. அந்த நாட்டைச் சேர்ந்த பயங்கரவாதிகள், அமைப்புகள் என 139 பேர் இடம் பெற்றுள்ளனர்.

ஐ.நா. பட்டியலில் அல்கொய்தா பயங்கரவாத இயக்கத்தின் தலைவராகத் திகழ்ந்த ஒஸாமா பின்லேடனின் வாரிசு அய்மான் அல் ஜவாஹிரி முதல் இடம்பிடித்துள்ளார். இவர், பாகிஸ்தானில் வசித்து வந்தவர்கள் அல்லது அங்கு இயங்கி வருகிற பயங்கரவாதிகள் குழுவில் இருந்து செயற்பட்டவர், தங்கள்




பாகிஸ்தான் தரப்பில் 139 பேராம்

செயற்பாடுகளுக்கு பாகிஸ்தானைத் தளமாகக் கொண்டு செயற்படுகின்றவர்கள் வரிசையில் அவர் இடம் பிடித்து உள்ளார்.

மும்பை தாக்குதல்களில் 6 அமெரிக்கர்கள் உள்ளிட்ட 166 பேர் கொன்று குவிக்கப்பட்டமைக்குப் பின்னணியில் இருந்து செயற்பட்ட ஹபீஸ் சயீத்தின் பெயரும் இந்தப் பட்டியலில் உள்ளது.

மும்பை தொடர் குண்டுவெடிப்பு வழக்கில் தேடப்படுகிற நிழல் உலக தாதா தாவூத் இப்ராகிம் பெயரும் பயங்கரவாதிகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இவர் ராவல்பிண்டி, கராச்சியில் வழங்கப்பட்ட பல்வேறு பாஸ்போர்ட்டுகளை கொண்டுள்ள பயங்கரவாதி எனப் பட்டியலிடப்பட்டு உள்ளார். இவருக்கு கராச்சி நகரில் நூராபாத்தில் மலைப்பாங்கான இடத்தில் அரண்மனை போன்ற பங்களா இருப்பதாகவும் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 8 கோடி எழுபது லட்சம் பேரின் முகப் புத்தகத் தகவல்கள் திருட்டு

## சர்வதேசத்தையே கலக்கும் மோசடி குறித்து சம்பவம்


கேம்பிரிட்ஜ் அனாலிட்டிகா நிறுவனம் எட்டுக் கோடி எழுபது லட்சம் பயனாளர்களின் தனிப்பட்ட தகவல்களை திரட்டியிருக்கக் கூடும் என்று 'பேஸ்புக்' (முகப் புத்தகம்) நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் 2016 ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலுக்கான பிரசாரத்தில் டொனால்ட் ட்ரம்ப் பிற்காக, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த கேம் பிரிட்ஜ் அனாலிட்டிகா என்ற நிறுவனம் பேஸ்புக் நிறுவனத்தின் 5 கோடி வாடிக்கையாளர்களின் தகவல்களைத்திரட்டி, தவறாகப்பயன்படுத்தியது எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனால் பேஸ்புக் நிறுவனத்திற்கு எதிராக சர்வதேச அளவில் விமர்சனம் எழுந்தது.

இதை 'பேஸ்புக்' நிறுவுநர் ஜுக்கர்பெர்க் ஒப்புக்கொண்டு மன்னிப்பு கேட்டமையுடன், இனி இப்படி நடக்காமல் பார்த்துக்கொள்வோம் என உறுதி அளித்தார்.

இந்திய அரசியலிலும் இப்பிரச்சினை புயலை ஏற்படுத்தியது. சர்வதேச அளவில் பேஸ்புக் நிறுவனத்துக்கு இந்த விவகாரம் கடும் நெருக்கடியை ஏற்படுத்தியது.

தகவல்கள் திருட்டுத் தொடர்பாக விசாரணை நடத்தஅமெரிக்கநாடாளு



மன்றத்தின் மூத்த உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுமுன் எதிர்வரும் 11ஆம் திகதி பேஸ்புக் தலைமை செயல் இயக்குநர் மார்க் ஜுக்கர்பக் ஆஜராகி வாக்குமூலம் அளிக்கிறார்.

இந்நிலையில், அமெரிக்காவில் உள்ள 8 கோடியே 70 லட்சம் பேரின் தகவல்கள் இங்கிலாந்து நிறுவனத்திடம் பகிரப்பட்டுள்ளன என பேஸ்புக்நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக பேஸ்புக் நிறுவனத்தின் மூத்த தொழிற்பிரிவு அதிகாரிமைக்ஷ்ரோப்பெர் கூறுகையில்-


இதுவரைமொத்தமாக 8 கோடி 70 லட்சம் மக்களின் தகவல்கள் முறையற்ற வகையில் பகிரப்பட்டு இருக்க கூடும். இதில் அதிகமானவை அமெரிக்க மக்களுடையவை. கேம்பிரிட்ஜ் அனாலிடிகா நிறுவனத்துக்கு தான் இந்தத் தகவல்கள் பகிரப்பட்டுள்ளன. பயனாளர்களின் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாக்க சில நடவடிக்கைகளை பேஸ்புக் மேற்கொண்டுள்ளது. கேம்பிரிட்ஜ் அனலடிகா நிறுவனம் திரட்டிய தகவல்களில் ஏழு கோடி எட்டு லட்சம் (81 சதவீதம்) அமெரிக்க நாட்டவர்களின் பேஸ்புக் கணக்குகள் ஆகும் என்றார்.

இங்கிலாந்து நாட்டைச்சேர்ந்த ஒரு கோடி 10 லட்சம் பயனாளர்களின் தகவல்கள் பகிரப்பட்டிருக்கின்றன என பேஸ்புக் நிறுவனம் தெரிவித்து உள்ளது. இந்த பட்டியலில் இந்தியா 7 ஆவது இடத்தில் உள்ளது. சுமார் 562,455 இந்திய பேஸ்புக் பயனாளர்களின் தனிப்பட்ட தகவல்கள் பகிரப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, 5 கோடி பயனாளர்களின் தகவல்கள் திருடப்பட்டன எனக் கூறப்பட்டு வந்த நிலையில், தற்போது பேஸ்புக் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை அந்த எண்ணிக்கையைத் தாண்டும் வகையில் அமைந்துள்ளமை பேஸ்புக் பயன்படுத்துபவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## ரஷ்யாவிடம் கடுமையாக நடந்தவர் தாமே என்கின்றார் அதிபர் ட்ரம்ப்





ரஷ்யாவிடம் என்னைவிடக் கடுமையாக நடந்து கொண்டவர்கள் யாரும் இல்லை என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கடந்த செவ்வாய்க்கிழமை தலைவர்களுடனான சந்திப்பில் ட்ரம்ப் கூறும்போது -

என்னைக் காட்டிலும் ரஷ்யாவிடம் கடுமையாக நடந்து கொண்டவர்கள் யாரும் இல்லை. மேலும் இதற்கிடையில் ரஷ்ய அதிபர் புடினுடன் நல்ல முறையில் உறவில் இருப்பது ஆரோக்கியமானவிஷயம். ரஷ்யாவுடன் நல்ல உறவு முறையில் இருப்பது முக்கியமான கடமையும் கூட.

ரஷ்யாவுடனும், சீனாவுடனும் சேர்ந்து இருப்பது நல்ல விஷயம்தான். எதிர்மறையானது கிடையாது. நாம் இப்போது மிகுந்த சக்தி வாய்ந்த நாடாக இருக்கிறோம். நாம் நமது ஆற்றல்கொண்டு ஏற்றுமதி செய்யும் நாடாகவும் இருக்கிறோம். இது ரஷ்யாவுக்கு சாதகமானதல்ல. ஆனால் அது நிச்சயமாக அமெரிக்காவுக்கு சாதகமான விஷயம்.

நமது ராணுவம் முன்பு இருந்ததைவிட பலமான தாக மாறப்போகிறது. இதுவும் ரஷ்யாவுக்கு உகந்த செய்தி அல்ல. - என்று கூறினார்.

முன்னதாக அமெரிக்கா - ரஷ்யா தொடர்பான ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தையில் ஈடுபட வெள்ளை மாளிகையிலுள்ள ஓவல் அலுவலகத்துக்கு ரஷ்ய அதிபர் புடினை ட்ரம்ப் அழைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஊ)

# அமெரிக்க வரி விதிப்புக்கு சீனா பதிலடி வரி விதிப்பு



ஏட்டிக்குப் போட்டியாக நடவடிக்கை

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் 1,300 பொருள்களின் மீது புதிய வரிகளை விதிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளதற்குப் பதிலடியாக அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு வரி விதிக்கப் போவதாக அறிவித்துள்ளது சீனா.

சோயா அவரை, கார்கள் மற்றும் ஒரேஞ்சு பழச்சாறு உட்பட 106 அமெரிக்க பொருள்களின் மீது 25 சதவீதம் அதிக வரி விதிக்கப்போவதாக சீனா தெரிவித்திருக்கிறது.

1,300 சீனப் பொருள்களுக்கு 25 சதவீத அதிக வரி விதிக்கும் விவரங்களை அமெரிக்கா அறிவித்த சில மணிநேரத்தில், பழிக்குப் பழி வாங்கும் விதத்தில் இந்த நடவடிக்கை வந்துள்ளது.

அமெரிக்கா அதிக வரி விதிக்கப் போவதாக குறிப்பிட்டுள்ள பொருள்களில் சீனாவில் செய்யப்படும் தொலைக்காட்சிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் அடங்குகின்றன.

சீனாவின் நியாயமற்ற அறிவுசார் சொத்துரிமைக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைதான் தங்களின் அதிக வரி விதிப்பு முன்மொழிவு என்று வெள்ளை மாளிகை விளக்கம் அளித்துள்ளது.

சீனாவின் மிக விரைவான இந்த நடவடிக்கையால் அதிர்ச்சி அடைந்த முதலீட்டாளர்களால், ஐரோப்பாவின் பங்குச் சந்தைகள் சரிவைச் சந்தித்துள்ளன.

நியூயோர்க்கில் 'த டவ் ஜோன்ஸ்' பங்குச் சந்தை 550 புள்ளிகள் குறைவாக துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, அமெரிக்காவால் முன்மொழியப்பட்டுள்ளவரி விதிப்பை கடுமையாக கண்டிப்பதாகவும், வலுவாக எதிர்ப்பதாகவும் தெரிவித்த சீனா, இதனை ஒரு தலைப்பட்சமற்றும் பாதுகாப்புவாத நடவடிக்கை என்றும், இதற்கு பதில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியிருந்தது.

காலைக்கதிர்
Kalaikkathir





# காவிரி விவகாரத்தால் மீளவும் கொந்தளிக்கின்றது தமிழகம்

## மறியலில் ஈடுபட்ட ஸ்டாலின் உட்பட தி.மு.கவினர் கைது

சென்னை அண்ணாசாலை மற்றும் மெரீனா கடற்கரையில், தி.மு.க. தலைவர் ஸ்டாலின் தலைமையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழக எதிர்க்கட்சியினர் கைது செய்யப்பட்டனர்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்தி தி.மு.க. உள்ளிட்ட எதிர்க் கட்சிகள் சார்பில் தமிழகம், புதுச்சேரியில் நேற்று முழு அடைப்புப் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்துக்கு போக்குவரத்து தொழிற்சங்கங்கள், வணிகர் சங்கங்கள் உட்பட அனைத்து தரப்பினரும் ஆதரவு தெரிவித்திருந்தனர். இதனால், பல இடங்களில் வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. கடைகளும் அடைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தின் பல பகுதிகளிலும் நேற்றுக் காலை முதலே தி.மு.க, காங்கிரஸ், ம.தி.மு.க, மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி மற்றும் திராவிடர் கழகத் தொண்டர்கள் சாலை மறியல் போராட் டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

சென்னை அண்ணா சாலையில் மு.க. ஸ்டாலின் தலைமையில் எதிர்க்கட்சியினர் சாலை மறியலில் ஈடுபட்டனர். விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன், திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி ஆகியோர் இதில் பங்கேற்றனர். பின்னர் ஊர்வலமாகச் சென்ற எதிர்க்கட்சியினர் சென்னை மெரீனா கடற்கரை பகுதியில் சாலை மறியல் போராட்டத்தை தொடர்ந்தனர். இதனால் அண்ணாசாலை– வாலஜா சாலையில் போக்குவரத்து ஸ்தம்பித்தது.

பின்னர் போராட்டத்தில் ஈடுபட்ட மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்களை பொலிஸார் கைது செய்தனர். (உ)

# மான் வேட்டை வழக்கில் சல்மான்கான் குற்றவாளி என நேற்றுத் தீர்ப்பு



அரிய வகை மான்களை வேட்டையாடிய மற்றொரு வழக்கில் பொலிவுட் நடிகர் சல்மான்கான் குற்றவாளி என ஜோத்பூர் மாஜிஸ்திரேட் நீதிமன்றம் நேற்று தீர்ப்பு அளித்துள்ளது.

பிரபல ஹிந்தி நடிகர் சல்மான்கான் நடிப்பில் கொடி கட்டிப் பறந்தாலும் பல்வேறு சர்ச்சைகளிலும் சிக்கிக் கொண்டவர்.

அவர் மீது பல்வேறு வழக்குகள் இருக்கின்றன. அதில் மான்களை வேட்டையாடிய வழக்களும் அடங்கும்.

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் அருகே உள்ள கான் களி கிராமத்தில் ஹம் சாத் சாத் ஹயன் என்ற ஹிந்திப் படத்தின் படப்பிடிப்பு 1998ஆம் ஆண்டு ஒக்ரோபர் 2 ஆம் திகதி நடந்தது.

அன்று இரவு அரிய வகை மான்கள் இரண்டை படப்பிடிப்பில் இருந்த நடிகர் சல்மான்கான் வேட்டையாடினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது. இதேபோல நடிகர் சயீப்அலிகான், நடிகைகள் சோனாலி பிந்த்ரே, தபு, நீலம் ஆகியோர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த வழக்கில் நேற்றுத் தீர்ப்பு வழங்கிய நீதிபதி, மான்வேட்டை வழக்கில் சல்மான்கான் குற்றவாளி என அறிவித்தார். குற்றம்சாட்டப்பட் மற்ற அனைவரும் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தீர்ப்பு வெளியாவதையொட்டி சல்மான் கான் தனது பாதுகாவலருடன் மன்றுக்கு வந்திருந்தார். அவர் குற்றவாளி என அறிவிக்கப்பட்டமையால் அவர் உடனடியாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்.

சல்மான்கான் மீதான கடைசி மான்வேட்டை வழக்கு இதுவாகும். கடந்த ஆண்டு ஆயுத சட்ட வழக்கில் அவரை ஜோத்பூர் நீதிமன்றம் விடுவித்து இருந்தது. மேலும் சின்கரா மான்வேட்டை வழக்கிலும் அவர் விடுவிக்கப்பட்டு இருந்தார்.

# ஜெயலலிதாவின் டாக்டர்கள் இன்று குறுக்கு விசாரணையில்

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மரணம் தொடர்பாக 6 அரசு மருத்துவர்களிடம் இன்று வெள்ளிக்கிழமை சசிகலா தரப்பு வழக்குரைஞர்கள் குறுக்கு விசாரணை நடத்தவுள்ளனர்.

அதைத் தொடர்ந்து நாளை முன்னாள் தலைமைச் செய லர்களிடம் குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

ஜெயலலிதா மரணம் தொடர்பாக ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையில் தனிநபர் விசா ரணை ஆணையத்தை தமிழக அரசு அமைத்துள்ளது. இந்த ஆணையத்தில் சசிகலாவின் உறவினர்கள், முன்னாள் தலைமைச் செயலர்கள், காவல்துறை அதிகாரிகள், அரசு மருத்துவர்கள், ஜெயலலிதாவின் உதவியாளர்கள், அவரது வீட்டில் பணிபுரிந்தவர்கள் என இதுவரை 25 இற்கும் மேற்பட்டோர் ஆஜராகி விளக்கம் அளித்துள்ளனர்.

அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பும், அதற்குப் பின்பும் அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்து விசாரணை ஆணையத்தில் சசிகலா அண்மையில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தார்.

மேலும், ஜெயலலிதா மரணம் தொடர்பாக சசிகலாவுக்கு எதிராக முறைப்பாடு அளித்தவர்கள், சிகிச்சை அளித்த மருத்துவர்களிடம் சசிகலாவின் சட்டத்தரணி குறுக்கு விசாரணை செய்ய ஆணையம் அனுமதி அளித்தது.



# ஐ.பி.எல். ஆரம்ப நிகழ்வில் நடனமாடுகின்றார் தமன்னா!

ஐ.பி.எல். போட்டிகள் இந்தியாவின் மும்பையில் நாளை 7 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன. இந்தப் போட்டிகளைப் பொதுவாக போட்டி என்று சொல்லாமல் திருவிழா என்றுதான் சொல்வார்கள். இதற்கு முன் நடந்த ஐ.பி.எல். போட்டிகளின் தொடக்க விழாக்கள் கோலாகலமாக நடந்தன. அனைத்து அணிகளின் தலைவர்களும் தொடக்க நாளில் உறுதிமொழி எடுத்துக்கொள்வார்கள். ஆனால், இந்த ஆண்டில் சென்னை, மும்பை அணிகளின் தலைவர்கள் மட்டுமே கலந்து கொள்ள உள்ளார்கள். மற்ற அணித் தலைவர்களை வரவழைக்கின்றமையை இந்த ஆண்டு நிறுத்திவிட்டார்கள்.

கிரிக்கெட் சபையை நிர்வகிக்கும் உச்சநீதி மன்றம் நியமித்த குழுவினர் எடுத்த முடிவு இது என்கிறார்கள்.

இந்த ஆண்டு தொடக்க விழாவில் நடிகை தமன்னா நடனமாட உள்ளார். அதற்காக அவருக்குப் பெரும் தொகை சம்பளமாகத் தரப்படுகிறது. ஹிந்தி நடிகர் ரன் வீர் சிங் உடல்நிலை சரியில்லாதமையால் தொடக்க விழா நிகழ்ச்சியிலிருந்து விலகிவிட்டார். இருந்தாலும் தொடக்க நாளில் யார் யார் பங்கேற்கிறார்கள் என்பது பற்றி அதிகாரபூர்வத் தகவல் இன்னும் வெளியாகவில்லை.

# சேர வேண்டியவர்களுடன் கமல்ஹாசன் சேர வேண்டிய நேரத்தில் சேருவாராம்!



சேர வேண்டிய நேரத்தில் சேர வேண்டியவர்களுடன் சேருவோம் என்று மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் திருச்சி பொதுக்கூட்டத்தில் பேசும் போது தெரிவித்தார்.

மக்கள் நீதி மய்யத்தின் பொதுக் கூட்டம் திருச்சியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் பேசும்போது –

காவிரி மேலாண்மை வாரியத்தில் மத்திய அரசு செய்து வருவது தவறு. காவிரி பிரச்சினையில் நூற்றாண்டுகளாக தமிழக உரிமை பறிக்கப்பட்டுள்ளது. காவிரி மேலாண்மை வாரியத்தை அமைத்தே ஆக வேண்டும்.

காவிரி மேலாண்மை அமைக்கா விட்டால், தமிழகம் அமைதியாக ஒத்துழைக்க மறுக்கும். அரசியல் சூழ்ச்சி வேண்டாம், நேர் கொள்வோம், எதிர்கொள்வோம். காவிரி பிரச்சனையில் தீர்வை நோக்கி மக்கள் நீதி மய்யம் செல்கிறது.

இழந்த அரசியல் மாண்பை மீட்டெடுக்க வேண்டும் என்பது எனது கனவு.

எங்களுக்கு உண்ணாவிரதத்தில் நம்பிக்கையில்லை, உண்ணுவதில்தான் நம்பிக்கையுள்ளது. மத்திய அரசின் முதுகுக்கு பின்னால் இருக்கும் மாநில அரசு, நீருக்காக எங்களைக் கெஞ்ச வைத்து விட்டது.

உறங்குபவர்களை தட்டி எழுப்பி விடலாம், உறங்குவது போல் நடிப்பவர்களை ஒன்றுமே செய்ய முடியாது. நாங்கள் செயற்படத் தொடங்கும்போது மக்கள் ஏமாற மாட்டார்கள். சேர வேண்டிய நேரத்தில் சேர வேண்டியவர்களுடன் சேருவோம். – என்றார்.

# 62 அடி உயர அனுமர் சிலை தரைவழியாக இடம் மாற்றம்



கர்நாடக மாநிலம் கோலார் மாவட்டத்தின் பைராபுராவில் இருந்து 62 அடி உயரம் உள்ள பிரம்மாண்டமான ஆஞ்சநேயர் சிலையை, பெங்களூருக்குக் கொண்டு செல்லும் பணிகள் செவ்வாயன்று தொடங்கின.

இந்தச் சிலை 30 எடை தூக்கும் இயந்திரங்களின் உதவியுடன் 300 சக்கர லொறியில் ஏற்றப்பட்டது. பின்னர் தேசிய நெடுஞ்சாலைத் துறையிடம் அனுமதி பெற்று பெங்களூர் நோக்கிக் கொண்டுவரப்பட்டது. இதனால் நேற்றுமுன்தினம் காலையில் 'ஓல்ட்' மெட்ராஸ் சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இது குறித்து ஸ்ரீ ராம சைதன்யா அறக்கட்டளையின் செயலர் மஞ்சு கூறும்போது –

பெங்களூரில் உள்ள காச்சரக்கனஹள்ளி ராமர் கோயிலில் 62 அடி உயர ஆஞ்சநேயர் சிலையை நிறுவ திட்டமிடப்பட்டது. இதற்காக 62 அடி நீளமுடைய ஒரே கல்லை சுமார் 6 மாதங்களாக நாடு முழுவதும் தேடினோம். கோலாரில் இந்தக் கல் கிடைத்த பின்னர் ரூ.10 கோடி (இலங்கைப் பணத்தில் சுமார் ரூ. 25 கோடி) செலவில் 30 சிற்பிகளைக்கொண்டு ஆஞ்சநேயர் சிலை உருவாக்கும் பணிகள் தொடங்கின. பணிகள் முடியாத நிலையில், 4 அடி அகலமும் 750 தொன் எடையும் கொண்ட இந்தச் சிலையை பெங்களூர் கொண்டுசெல்கிறோம்.

அங்கு சென்ற பிறகு சிலைக்கு இறுதிவடிவம் கொடுக்கப்படும். இந்தப் பணி முடிந்த பின்னர் அடுத்த ராம நவமி தினத்தன்று இந்த ஆஞ்சநேயர் சிலை முறையாக பிரதிஷ்டை செய்யப்படும். இந்த சிலை நிறுவப்பட்டால் உலகிலேயே உயரமான ஆஞ்சநேயர் சிலை என்ற பெருமை இதற்கு கிடைக்கும். – என்றார். (உ)

# கொமன்வெல்த் விளையாட்டுகள் ஆஸியில் கோலாகலமாக ஆரம்பம்




ஆஸ்திரேலியாவின் கோல்டு கோஸ்ட் நகரில் 21 ஆவது கொமன் வெல்த் (பொது நலவாய அமைப்பு) விளையாட்டுப் போட்டி நேற்று கோலாகலமாக தொடங்கியது.

ஏப்ரல் 15 ஆம் திகதி வரை நடைபெற உள்ள இந்தத் தொடரில் ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா, கென்யா, மலேசியா உள்ளிட்ட 71 நாடுகளைச் சேர்ந்த சுமார் 6,600 வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர்.

அதிக பட்சமாக, போட்டியை நடத்தும் ஆஸ்திரேலியா சார்பில் 471 பேர் பல்வேறு போட்டிகளில் கலந்து கொள்கின்றனர்.

இதற்கு அடுத்தபடியாக இங்கிலாந்து 396 பேரை களமிறக்கி உள்ளது. இந்தியா சார்பில் மொத்தம் 219 வீரர், வீராங்கனைகளை உள்ளடக்கிய அணி பங்கேற்கிறது. கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் இம்முறை மொத்தம் 19 விளையாட்டுகளில் 275 பந்தயங்கள் நடத்தப்படுகின்றன. மகளிர் பிரிவில் ரக்பி, கடற்கரைக் கரப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தியா 14 போட்டிகளில் களமிறங்குகிறது. வழக்கம் போல் துப்பாக்கி சுடுதல், மல்யுத்தம், குத்துச்சண்டை ஆகியவற்றில் இந்தியா ஆதிக்கம் செலுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றுடன் பட்மிண்டன், ஸ்குவாஷ், பளுதூக்குதல், தட்டு எறிதல், நீளம் தாண்டுதல், ஈட்டி எறிதல், டேபிள் டென்னிஸ் ஆகியவற்றிலும் இந்தியப் போட்டியாளர்கள் பதக்கம் வெல்ல வாய்ப்பிருப்பதாகக் கருதப்படுகிறது. மேலும் ஹொக்கியில் ஆடவர் பிரிவில் இந்திய அணி பதக்கம் கைப்பற்றவும் வாய்ப்புள்ளது.

கொமன்வெல்த் போட்டியின் தொடக்க விழா இந்திய நேரப்படி நேற்று பிற்கல் 3 மணி அளவில் நடைபெற்றது. தொடக்க விழாவையொட்டி கண்கவர் கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### உருமாறிய பெயர்கள்

இங்கிலாந்து ஆதிக்கத்தின் கீழ் இருந்த நாடுகளை ஒருங்கிணைத்து நடத்தப்படுவதே கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டி ஆகும். இந்தத் தொடர் 1930 முதல் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு வருகிறது. முதல் தொடரில் 11 நாடுகளை சேர்ந்த 400 பேர் கலந்து கொண் டனர். 1950 வரை இந்தத் தொடர் ‘தி எம்பயர் கேம்ஸ்’ என்றே அழைக்கப்பட்டது. இதன் பின்னர் 1952 இல் பிரிட்டிஷ் எம்பயர் மற்றும் கொமன்வெல்த் விளையாட்டு என பெயர் மாற்றப்பட்டது. இந்த பெயருடன் 1954 ஆம் ஆண்டு போட்டி கனடாவில் நடத்தப்பட்டது. இதன் பின்னர் 1978 இல் கனடாவில் நடைபெற்ற தொடரில்தான் கொமன்வெல்த் விளையாட்டு என பெயர் மாற்றப்பட்டது.

### மருத்துவருக்கு எச்சரிக்கை

கொமன்வெல்த் போட்டிக்கான கிராமத்தில் இந்திய வீரர்கள் தங்கி யிருந்த அறைக்கு அருகே ஊசி கிடந்ததால் சர்ச்சை எழுந்தது. இதையடுத்து இந்திய வீரர்களிடம் ஊக்கமருந்துச் சோதனை மேற் கொள்ளப்பட்டது. இதில் எந்த வீரரும் சிக்கவில்லை. இது தொடர் பாக விசாரித்த கொமன்வெல்த் அதிகாரிகள், இந்திய மருத்துவர் அமோல் படேலை கண்டித்துள்ளனர். இந்திய குத்துச்சண்டை வீரர் ஒருவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதால், அமோல் படேல் உரிய அனுமதி இல்லாமல் விற்ற மின் – பி ஊசி உபயோகப்படுத்தி உள்ளார். இதனால் கொமன் வெல்த் அதிகாரிகள் அவருக்கு எழுத்துபூர்வமான கண்டனத்தை அனுப்பியுள்ளனர்.

# ஐ.பி.எல்லுக்குத் தடை கோரி சென்னை நீதிமன்றில் வழக்கு



ஐ.பி.எல். போட்டிகளுக்கு தடை விதிக்கக் கோரி தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், மனு தாரரின் முறைப்பாடு தொடர்பாக விளக்கம் கேட்டு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

2018 ஆம் ஆண்டிற்கான ஐ.பி.எல். கிரிக்கெட் நாளை 7 ஆம் திகதி மும்பையில் தொடங்கி பல்வேறு நகரங்களில் நடைபெற உள்ளது. இந்நிலையில், ஐ.பி.எல். போட்டிகளுக்கு தடை விதிக்கக்கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் பொதுநல மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

சூதாட்ட முறைப்பாட்டில் சிக்கி இடைநிறுத்தம் செய்யப்பட்ட ஐ.பி.எஸ். அதிகாரி சம்பத்குமார் இந்த வழக்கைத் தாக்கல் செய்தார்.

அவர் தனது மனுவில், சூதாட்டத்தைத் தடை செய்யாமல் இந்த ஆண்டு ஐ.பி.எல். போட்டிகளை நடத்த அனுமதி வழங்கக் கூடாது என்று கூறியுள்ளார். மேலும், கடந்த 2013 ஆம் ஆண்டு சூதாட்டம் குறித்த முறைப்பாட்டில் அணிகள் மீது மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும் மனுவில் கூறியிருந்தார்.

அவரது மனு நேற்று தலைமை நீதிபதி அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரரின் முறைப்பாடு குறித்து விளக்கம் அளிக்கும் படி பி.சி.சி.ஐ. மற் றும் மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிபதிகள் உத்தரவிட்டு வழக்கு விசாரணையை ஒத்தி வைத்தனர்.

நாட்டில் பல சட் டங்கள் இருந்தும், தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் ஊழல் ஒழிக்கப்பட்டுவிட் டதா என்று கேள்வி எழுப்பிய நீதிபதிகள், நாட்டில் ஏராளமான சட்டங்களுடன் ஏராளமான குற்றவாளிகளும் இருக்கின்றனர் எனத் தெரிவித்தனர்.

சூதாட்ட தரகர்களிடம் சம்பத் குமார் பணம் எதுவும் பெற வில்லை என்பது விசாரணைக்குழு அறிக்கையில் உறுதி செய்யப் பட்டமையால், அவர் மீதான இடை நிறுத்த உத்தரவு ரத்துச் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.



## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதற்கிடையில் முல்லைத் தீவை முற்றிலும் தன்வசம் கொண்டு வந்துவிடும் மகாவலி அதிகார சபை. இதுதான் யதார்த்தம்

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் சபையில் எச்ச ரித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 120ஆவது அமர்வு அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் கைதடியிலுள்ள தலைமைச் செயலகத்தில் நேற் றுக் காலை நடந்தது. வடக்கு மாகாண காணிகள் தொடர்பான சிறப்பு அமர்வாக அங்கு விவா தம் நடைபெற்றது.

அதில் உரையாற்றும்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்று காணிகள் சம்பந்த மான சிறப்பு அமர்வு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டமைக் கான காரணம் முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப் படும் சிங்களக் குடியேற்றங்கள் பற்றி ஆராயவே. எமது உறுப்பி னர்கள் நடைமுறையில் இன்று அங்கு நடைபெறுவனவற்றை இங்கு விலாவாரியாக விபரிப் பார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆனால் இவ்வாறான காரி யங்கள் நடக்க ஏதுவாக இருக் கும் சட்ட சம்பந்தமான சில விட யங்களை நான் உங்களுக்கு எடுத்தியம்ப விரும்புகின்றேன்.

மகாவலி அதிகாரசபைச் சட்டம் 1979ஆம் ஆண்டு 23 ஆவது சட்டமாகும். அதன் முக் கிய நோக்கங்கள் உணவு உற் பத்தி, நீர்சக்தி உற்பத்தி, காணி யில்லாதவருக்கு காணி வழங் கல் மற்றும் வெள்ளத்தடுப்பு ஆகியனவாகும்.

இந்தச் சட்டத்தின் அதிகார வரம்பினுள் இருக்கும் வனங் கள், வனவிலங்குகள், நீர்ப்பாச னம், விவசாய சேவைகள், விவ சாயம் போன்றவற்றின் நிர்வாக மும் அவற்றைக் கொண்ட நிலங்களும் மகாவலி அதிகார சபையின் கட்டுப்பாட்டுக்குள் வருவன.

இந்தச் சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் மகாவலிக்குப் பொறுப்பான அமைச்சர் ஜனாதிபதியின் ஒப் புதலுடன் வர்த்தமானியில் பிர சுரிக்கப்படும் கட்டளையின் மூலம் எந்த ஒரு நிலப் பகுதியை யும் சிறப்பு நிலப்பகுதியாகப் பிரகடனப்படுத்தலாம். இந்தக் கட்டளைக்கு நாடாளுமன்றத் தால் பின்னர் ஒப்புதல் அளிக் கப்பட வேண்டும்.

பிரகடனப்படுத்தப்பட்ட இந் தச் சிறப்பு நிலப்பரப்பில் பிரிவு 13 இன் கீழ்க் குறிப்பிடப்படும் பலதையும் செய்யலாம். 36 விடயங்கள் பிரிவு 13இல் அடையாளம் காட்டப்பட்டுள் ளன. முக்கியமாக அந்தப் பிரி வின் கீழ் மாகாவலி அதிகார சபையானது ஒரு சிறப்பு நிலப் பரப்பினுள் காணப்படும் காணி களில், தோட்டங்களில் அல்லது நிலப்பகுதியில் மக்களைக் குடி யிருத்த சகல நடவடிக்கை களையும் எடுக்க முடியும். அவ் வாறு குடியேற்றப்படுவோர் தாம் பெற்ற காணிகளை, தோட்டங் களை, நிலப்பகுதிகளை மேம் படுத்துவதற்கு அதிகார சபை அவர்களுக்கு சகல பண உதவி களையும் மற்றைய உதவி களையும் நல்கலாம்.

எவ்வாறானவர்களைக் குடி யேற்றலாம் என்று கூறப்பட வில்லை. சர்வதேச நியம னங்களின்படி நிலப்பகுதி களைச் சுற்றியிருக்கும் பிரதே சங்களில் இருப்பவர்களுக்கே முன்னுரிமை கொடுக்க வேண் டும். அவ்வாறு கொடுக்காமல் வடக்கு மாகாணத்துக்கு வெளி யில் இருந்தே மக்களைக் கொண்டு வந்து மகாவலி அதி கார சபை இந்த மாகாணத்துக் குள் குடியேற்றியுள்ளது.

1987ஆம் ஆண்டில் 13 ஆவது திருத்தச்சட்டம் நடை முறைக்கு வந்த போது, மாகா ணங்களுக்கு சில உரித்துக்கள் கொடுக்கப்பட்டன. முக்கியமாக அரச காணிகள் சம்பந்தமாக பயனாளிகளைத் தேர்ந்தெடுக் கும் பொறுப்பு மாகாண சபை களையே சாரும் என்று அரசி யலமைப்பின் மாகாண சபை யின் அதிகாரங்களைப் பட்டியல் இட்டு கூறும் விடயங்களுள் காணி சம்பந்தமான 18 ஆவது விடயத்தின் கீழ் குறிப்பிட்ட 2 ஆவது அட்டவணையின் 2:4 என்ற விடயத்தின் கீழ் கூறப் பட்டுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டம் அரசமைப்பின் ஓர் அங்கமே. சட்டப்படி அரசமைப்பை மற்ற எல்லாச் சட்டங்களுக்கும் பார்க்க கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது. அப்படி இருந்தும் 1979ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட மாகாவலி அதிகார சபைச் சட்டம் எதனையும் கணக்கில் எடுக்காது தான் தோன்றித் தனமாக தனது வேலைகளைச் செய்து கொண்டு போகின்றது.

காணிகளைக் கைவசம் வைத்திருப்பது மட்டுமன்றிப் பய னாளிகளுக்குக் கைமாற்றவும் அது உரித்து கொண்டிருக் கின்றது. இவ்வாறான குடியேற் றங்களும் காணிக் கைமாற்றங் களும் எந்த அளவுக்குச் சட்டப் படி வலிதுடையதாவன என்பது இன்னமும் நீதிமன்றங்களால் தீர்மானிக்கப்படவில்லை என்றே நினைக்கின்றேன். மகாவலி அதிகாரசபைச்சட்டம் 1987ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரச மைப்பின் 13ஆவது திருத்தத் துக்கு அமையவே செயற்பட்டி ருக்க வேண்டும். அவ்வாறு செயற்படுவதாகத் தெரிய வில்லை.

பின்வரும் இடங்களைச் சிறப்பு நிலப்பகுதிகளாகத் தற் போது ஜனாதிபதியாக இருக்கும் மைத்திரிபால சிறிசேன மகாவ லிக்குப் பொறுப்பான அமைச் சராக இருந்த போது 2007ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் திகதி வெளிவந்த வர்த்தமானி யில் பிரகடனப்படுத்தி உள்ளார்.

ஒன்று தென்னமரம் வாடியை அண்டிய பகுதி.

இரண்டு வவுனியா வடக்கு தமிழ் பிரதேச செயலர் பிரிவை ஒட்டிய பகுதி.

மூன்றாவது இடம் தான் இன்று முக்கியமடைந்துள்ளது. கரைதுறைப்பற்றின் பெரும் பான்மை இடங்களை உள்ள டக்கியுள்ளார் தற்போதைய ஜனாதிபதியும் அப்போதைய அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன. அதன் முழு விவரங்க ளையும் தரலாம் என்று நினைக் கின்றேன். இதில் கூறப்பட்ட மூன்றாவது சிறப்பு நிலப்பகுதி பின்வருமாறு –

வடக்கு – மாங்குளம் – முல் லைத்தீவு ஏ -34 வீதியின் மத் திய பகுதியில் இருந்து மேலும் முல்லைத்தீவு – பரந்தன் ஏ-35 வீதியில் இருந்து வாவியின் தெற்குப்புறக் கரை வரையில், பின்னர் முல்லைத்தீவு நகரத் தின் வடபால் அமைந்த வாவி யின் தெற்குப் புறமாகச் சென்று கிழக்குக் கடலை அடைதல்.

கிழக்கு மேற்கூறப்பட்ட வடக்கு எல்லை தெற்கால் கடல் ஓரமாகச் சென்று புல்மோடை வடக்கில் உள்ள ஏரியின் இடது கரை வரையில். தெற்கு மேற் கூறப்பட்ட கிழக்கெல்லையில் இருந்து ஏரியின் வடக்குப் புற மாக தென்னமரவாடி றோட்டு வரையில்.

மேற்கு மேற்கூறப்பட்ட தெற்கு எல்லையில் இருந்து வடக்கு நோக்கி 'எல்' வலயத்தின் கிழக்கெல்லையால் தண்ணி யூற்று சந்தி வரையிலும், அதா வது எல் வலயத்தின் வடக்கு மேலும் கிழக்கு எல்லைகள் சேரும் இடம் வரையில், வந்து வடக்கு நோக்கிப் போய் மாங் குளம் – முல்லைத்தீவுத் தெருவை அடையும் வரையில்.

ஆகவே குறிப்பிட்ட காணியா னது புல்மோட்டைக்கு வடக்கில் உள்ள முல்லைத்தீவு மாவட்டத் தின் கொக்கிளாய், கருவாட்டுக் கேணி, கொக்குத்தொடுவாய், செம்மலை, நாயாறு, அலம்பில், சிலாவத்துறை போன்றவற்றை உள்ளடக்கிய கரைத்துறைப்பற் றுக் கிராமங்களை முல்லைத் தீவு நகரம் வரை உள்ளேற்றுள் ளது. அதற்கு முன்னரே மகா வலியின் 'எல்' வலயம் இந்தக் காணிகளின் கிழக்கெல்லை வரை வர்த்தமானியில் பிரசுரிக் கப்பட்டுவிட்டது. இப்பொழுது அதனுடன் சேர்ந்த காணியும் 2007இல் பிரகடனப்படுத்தப்பட் டுள்ளது.

மகாவலி அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 13(4) இன் கீழ் மேற்படி காணிகளில் எல்லாம் மக்களைக் கொண்டு வந்து குடியேற்ற அதிகார சபைக்கு உரித்துண்டு. ஆனால் எந்தள வுக்கு வெளி மாகாணங்களில் இருந்து வருவோர் சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்படலாம் என் பது சந்தேகத்துக்கு உரியது. இப் பொழுது அதுதான் நடைமுறை யில் நடந்து வருகின்றது. அவ் வாறு நடப்பவற்றின் விவரங் களை உறுப்பினர்கள் இன்று எடுத்தியம்புவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

எனினும் கொக்குத்தொடு வாய் விவசாயக் காணிகள் பற்றி சில விபரங்களைத் தந்து எனது சிற்றுரையை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக் கின்றேன்.

நாயாறு கடல் ஏரிக்குத் தெற்கே 6 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. கொக்குத் தொடுவாய் கிராமமும் அதனுள் அடங்கும். போர் காரணமாக அந்தப் பகுதியில் இருந்தவர்கள் 1984ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இடம் பெயர்ந்தார்கள். சுமார் 27 வருட காலமாக முல் லைத்தீவுப் பகுதிகளில் அவர் கள் இடம் பெயர்ந்திருந்தார்கள்.

பல இடங்களில் அவர்கள் தற்காலிகமாகக் குடியிருந்து வரவேண்டியிருந்தது. பொது வாக அவர்கள் விவசாயிகளே. சிலர் மீன்பிடித் தொழிலில் ஈடு பட்டவர்கள். அவர்கள் பாரம்பரி யமாக கடலோரத்தில் வாழ்ந்து வந்திருந்தாலும் அவர்களின் விவசாயநிலங்கள் கொக்கிளாய் கிராமத்துக்கு வடக்கிலும் மேற்கிலும் இருந்தன.

இவை காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 1950, 1966, 1971 மற்றும் 1977 ஆம் ஆண்டுகளில் அவர்களுக்குக் கிடைத்த காணிகள். இவர்கள் இடம் பெயர்ந்து சென்று கொண்டிருந்த காலகட்டத்தில் 15.04.1988 ஆம் திகதியன்று இவர்களின் காணிகள் மகாவலி திட்டத்தின் கீழ் மகாவலி அதி காரசபையின் 'எல்' வலையத் துக்குச் சொந்தமான காணிகள் என்று வர்த்தமானியில் பிரசு ரிக்கப்பட்டன.

மக்கள் தமது பாரம்பரிய காணிகளை இழந்தனர். அந்தக் காணிகள் மகாவலிக் காணி களாக மாறின. 2013ஆம் ஆண்டு இந்த மக்கள் தமது காணிகளுக்கு திரும்பிய போது, அவர்களின் விவசாய நிலங்கள் மகாவலி அதிகார சபையால் வெளியில் இருந்து வந்தவர் களுக்கு 'எல்' வலயத்தின் கீழ் குடியேற்ற இடமளிக்கப்பட்டிருந் தனர்.

எல்.எல்.ஆர்.சியானது இவர் களின் காணிகள் திரும்ப அவர்களுக்கே கையளிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்திருந்தும், அவர்களின் காணிகள் அவர்களுக்குக் மீளக் கையளிக்கப்படவில்லை. வேறு காணிகளில் இவர்கள் குடியேற அனுமதிக்கப்பட்டிருந்தும் இன்று வரையில் அவர்களுக்கு புதிய காணிகள் சம்பந்தமாகக் கூட உரிய உரித்தாவணங்கள் வழங்கப்படவில்லை. இவர்க ளுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

முன்னர் அவர்களுக்கிருந்த விவசாய நிலங்களைத் திரும் பிக் கொடுக்க முடியா விட்டால் மற்றும் விவசாய நிலங்களே அவர்களுக்கு மாற்றீடாகக் கொடுக்கப்பட்டு உரித்தாவணங் களும் வழங்கப்பட வேண்டும். இவை கிடைக்குமா?

அரசால் காணி அபகரிப்பு முல்லைத்தீவு – வவுனியா மாவட்டங்களில் மிக வேகமாக நடைபெற்று வருகின்றது. அதனால்தான் இன்று இந்த சிறப்பு அமர்வை ஒழுங்குபடுத் தியுள்ளோம். கரைதுறைப் பற்றின் காணிகள் யாவும் மகா வலியால் விழுங்கப்பட்டு வரு கின்றது. ஏற்கனவே மணலாறு வெலிஓயா ஆகிவிட்டது. ஒரு மித்த எங்களின் நடவடிக் கைகளால்தான் ஓரளவுக்கு இதனைத் தடுத்து நிறுத்தலாம்.

அண்மையில் அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்த போது, மகாவலி அதிகார சபைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று கோரியிருந்தேன். அவர் அதுபற்றி பரிசீலிப்பதாக உத்த ரவாதம் அளித்தார். ஆனால் அது அவ்வளவு சுலபமன்று.

புதியதொரு சட்டத்தை மாகாண சபைகளுக்கு அளிக் கப்பட்ட பதின்மூன்றாம் திருத் தச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமை வாகத்தயாரித்து ஏற்ற பின்னரே மகாவலி அதிகார சபைச் சட் டத்தில் கைவைக்க முடியும். அதற்கிடையில் முல்லைத்தீவை முற்றிலும் தன்வசம் கொண்டு வந்துவிடும் மகாவலி அதிகார சபை. இது தான் யதார்த்தம்! – என்றார். (ஐ-7)

## சிங்களக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முல்லைத்தீவு உள்ளிட்ட வன்னி மாவட்டங்களில் மேற்கொள் ளப்பட்டு வரும் சிங்களக் குடி யேற்றங்கள் தொடர்பில் ஆரா யும் சிறப்பு அமர்வு நேற்று வியா ழக்கிழமை வடக்கு மாகாண சபையில் நடைபெற்றது.

அதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ள திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் நேரில் சென்று ஆராய்வதற்கு வடக்கு மாகாண சபையில் உறுப்பினர்கள் ஏகமனதாக முடிவெடுத்தனர்.

அதன் பிரகாரம் எதிர்வரும் 10ஆம் திகதி காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செய லகம் முன்பாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அனை வரும் ஒன்று கூடவுள்ளனர். அங்கிருந்து திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள் ளப்பட்டுள்ள கொக்கிளாய் , நாயாறு, மாயபுரம் உள்ளிட்ட பகுதிகளுக்கு அவர்கள் நேரடி யாகச் சென்று அந்தப் பகுதி களைப் பார்வையிடவுள்ளனர்.

அன்று மாலை மீண்டும் மாவட்ட செயலகம் முன்பு கூடி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தி மாவட்ட செயலர் ஊடாக ஜனாதிபதி மற்றும் பிரத மருக்கு மனுக் கையளிப்பது என சபை உறுப்பினர்கள் ஏகமன தாக தீர்மானித்துள்ளனர். (ஐ-7)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) டைய ஆசிரியர் ஒருவருக்கு 20 வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித் தார் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி. நெடுங்கேணியில் பாட்டியின் பராமரிப்பில் வசித்து வந்த சிறுமி 2014ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட் சைக்காகத் தனக்கு அறிமுக மான ஆசிரியர் ஒருவரிடம் கணித பாட வினாத்தாள்களை வாங்கித் தர முடியுமா எனக் கேட்டுள்ளார். அதற்கு அந்த ஆசிரியர் வாங்கித் தருவதாகக் கூறி இரண்டு தடவை ஏமாற் றியுள்ளார்.

மூன்றாவது தடவையும் சிறுமி ஆசிரியரின் வீட்டுக்குச் சென்று வினாத்தாள்களைக் கேட்டபோது, அதனை வாங்கி வரவில்லை எனக் கூறிய ஆசிரியர், தனது காணியில் வேலை செய்பவர்களுக்குத் தேநீர் ஊற்றிக்கொடுக்குமாறு கூறியுள்ளார். சிறுமியும் தேநீர் ஊற்றுவதற்காக வீட்டுக்குள் சென்றபோது ஆசிரியர் சிறுமி யைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இது தொடர்பாகப் பொலி ஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு எதிரியைக் கைது செய்து வவுனியா நீதிவான் நீதி மன்றில் முற்படுத்தியிருந்தனர்.

இதன் பிரகாரம் கடந்த 2017ஆம் ஆண்டு 07ஆம் மாதம் 18ஆம் திகதியன்று சட் டமா அதிபர் திணைக்களத்தி னால் குற்றப்பகர்வு பத்திரம் வவுனியா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு வழக்கின் விளக்கம் வவுனியா மேல் நீதி மன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டு நேற்றுத் தீர்ப்பிற்காக திகதி நியமிக்கப் பட்டிருந்தது.

வழக்கை விசாரித்த மேல் நீதிமன்ற நீதிபதி, எதிரியைக் குற்றவாளியாகக் கண்டதுடன், இருபது வருட கால கடூழியச் சிறைத்தண்டனை விதித்ததுடன் அபராதமாக ஒரு இலட்சம் ரூபா வும், அதனைச் செலுத்தத் தவ றின் ஆறு மாத கால சாதாரண சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நட்டஈட்டுப் பண மாக ரூபா ஐந்து இலட்சம் செலுத்தப்படவேண்டும் எனவும் குறித்த நட்டஈட்டைச் செலுத்த தவறின் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார்.

அத்துடன் நீதிபதி தனது தீர்ப்பில், தொடர்ந்தும் இந்த நீதிமன்றம் இவ்வகையான குற்றச் செயல்களுக்கு கடுமை யான தண்டனைகளை வழங்கி தீர்ப்பளிக்கின்றபோதிலும், சமூ கத்தில் இவ்வகையான குற்றச் செயல்கள் இடம்பெற்றுக் கொண்டிருப்பது மிகவும் வேத னைக்குரிய விடயம் என்றும், சமூகத்தில் கௌரவமான புனிதமான தொழில்களில் இருந்து கொண்டு இவ்வகை யான குற்றச்செயல்களில் ஈடு பட்டுக்கொண்டிருப்பவர்கள், ஈடுபட நினைப்பவர்களிற்கும் இத்தீர்ப்பின் மூலம் எச்சரிக்கை விடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

இவ்வழக்கு தொடுநர் தரப்பில் வழக்கை அரச சட்ட வாதி ஐ.எம்.எம் பாகிம் நெறிப் படுத்தியிருந்தார். (ஐ-100)

# தமிழரின் பிரச்சினைகளைத் தீர்க்கவே ரணிலுக்கு இறுதியாக ஒரு சந்தர்ப்பம்



## இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.06

புரையோடிப் போயுள்ள தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காக பிரதமருக்கு இறுதியாக ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எதிர்வரும் இரண்டு வருடங்களில் மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்தால் அடுத்த தேர்தலை மன உறுதியுடன் சந்திக்க முடியும் எனவும் இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை 46 மேலதிக வாக்குகளால் நேற்று முன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றில் தோற்கடிக்கப்பட்டது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராகச் சிறுபான்மை கட்சிகள் வாக்களித்தன.

இது தொடர்பில் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராகிருஷ்ணன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அண்மைக் காலமாக எதிர்க்கட்சிகளால் இந்த நாட்டு மக்களை ஏமாற்றுவதற்கு நடத்தப்பட்ட நாடகம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தற்போது, பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஐக்கிய தேசிய கட்சியின் மறுசீரமைப்பு பணிகள் விரைவாக நடத்தி அதிலும், மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பிரதமருக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்களது வாதப் பிரதிவாதங்களை முன்வைத்தனர். இருந்தும் இறுதியில் 122 பேர் எதிராக வாக்களித்து நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோல்வி அடையச் செய்தனர்.

இந்த வாக்களிப்பு மூலம் நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்விக்குக் காரணமாக இந்த நாட்டின் சிறுபான்மை மக்கள் இருந்துள்ளனர். குறிப்பாக சிறுபான்மைக் கட்சிகளான மலையகத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈ.பி.டி.பி. உட் பட முஸ்லிம் கட்சிகளும் இணைந்து வாக்களித்துள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவிலை. இதையும் நம்பிக்கையில்லாப்பிரேரணைக்கு ஆதரவாகக் கருதுகின்றேன்.

ஒட்டுமொத்தத்தில் இலங்கையின் சிறுபான்மைக் கட்சிகள் யாவும் ஒற்றுமையாக இணைந்துசெயற்பட்டுள்ளன. இதை உணர்ந்து எதிர்காலத்தில் செயற்பட்டு சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்துத் தீர்வு காணவேண்டும்.

குறிப்பாக, 30 வருட கொடூர யுத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படல் வேண்டும். இதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும். சிறுபான்மைக் கட்சிகளும் தலைவர்களும் இதை சரியாகப் பயன்படுத்தி சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இந்த நாட்டில் எந்த ஓர் அரசும் தனது ஆட்சியை அமைக்க வேண்டுமானாலும் அல்லது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானாலும் சிறுபான்மை மக்களின் ஆதரவு கட்டாயம் தேவை என்பதை மேற்படி விடயம் உணர்த்தி நிற்கின்றது.

பிரதமருக்கு எதிராக பல நிதி மோசடிகள் முன்வைக்கபட்ட போதும் அவை நிரூபணமாக வில்லை இருந்தும் முன்னைய ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற நிதி மோசடிகள் குறித்த நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாதப் பிரதிவாதங்களில் காணக்கூடியதாக இருந்தது.

இதனுடன் ஒப்பிடுகையில் பிரமர் ரணில் விக்கிரமசிங்க எவ்வளவோ நேர்மையானவர் என தெரிய வருகிறது. இந்த நாட்டுக்கும் குறிப்பாக சிறுபான்மை மக்களுக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியே சிறந்தது.

இவரின் ஆட்சிக் காலத்திலேயே சிறுபான்மை மக்களுக்கு நன்மை கிடைக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது. இதை உணர்ந்து சிறுபான்மையினராகிய நாங்கள் செயற்பட்டு எமது இலக்கை அடைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சிங்கள திரைத்துறையின் தந்தைக்கு ஜனாதிபதி பிறந்தநாள் வாழ்த்து!

கொழும்பு, ஏப். 06

சர்வதேச புகழ்பெற்ற திரைப்பட இயக்குநரான கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் 99 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது வீட்டுக்கு விஜயம் செய்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.



திம்பிரிகஸ்யாயவிலுள்ள அவரது வீட்டுக்கு ஜனாதிபதி நேற்று முற்பகல் விஜயம் செய்தார்.

கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸுடன் சுமுகமாகக் கலந்துரையாடிய ஜனாதிபதி, அவரது சுகதுக்கங்களை கேட்டறிந்ததுடன், அவரது நீண்ட ஆயுளுக்காக பிரார்த்தித்தார்.

கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மற்றும் சுமித்திரா பீரிஸ் ஆகியோருடன் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் இணைந்து கொண்ட ஜனாதிபதி பிறந்தநாள் கேக் வெட்டி மகிழ்ந்தார்.

தேசிய சினிமாத்துறை சர்வதேச கீர்த்தியைப் பெற்றுக் கொள்வதற்கு தனது படைப்பாற்றலை வழங்கிய இலங்கையின் சிரேஷ்ட திரைப்பட இயக்குநரான கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் மேற்கொண்டுள்ள பணிகளைப் பாராட்டி அவரது மருத்துவசிகிச்சை உள்ளிட்ட ஏனைய செலவுகளுக்கு விசேட மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்க ஜனாதிபதி அண்மையில் அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றிருந்தார்.

இந்த விசேட மாதாந்தக் கொடுப்பனவுக்கான ஆவணங்கள் மற்றும் அதற்கான முதலாவது காசோலையை ஜனாதிபதி கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டார, கலாநிதி சோமரத்ன திஸா நாயக, ரேணுகா பாலசூரிய ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# இலங்கை உட்பட்ட மூன்று நாடுகளுக்கு ரூ.4,312 கோடி கடன் வழங்கிய இந்தியா

கொழும்பு, ஏப்.06

இலங்கை, நேபாளம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு 4 ஆயிரத்து 312 கோடி ரூபா இந்தியா கடன் அளித்துள்ளது என வெளியுறவுத் துறை இணையமைச்சர் வி.கே. சிங் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மக்களவையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு வி.கே. சிங் எழுத்துபூர்வமாகத் தாக்கல் செய்திருக்கும் பதிலில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

2014-18 ஆம் ஆண்டு காலகட்டத்தில், இலங்கை, நேபாளம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இந்தியா 4 ஆயிரத்து 312 கோடி ரூபா கடன் அளித்துள்ளது. ஆப்கானிஸ்தானுக்கு 2 லட்சத்து 88.19 கோடி ரூபாவை இந்தியா அளித்துள்ளது.

நேபாளத்துக்கு 1,199.09 கோடி ரூபாவையும், இலங்கைக்கு 1,025.12 கோடி ரூபாவையும் இந்தியா கடனாக வழங்கியுள்ளது.

இலங்கை, நேபாளம், ஆப்கானிஸ்தான் போன்று பல்வேறு நாடுகளில் நடைபெறும் மறுகட்டமைப்பு பணிகளில் இந்தியா முக்கிய பங்காற்றி வருகிறது.

இருதரப்பு நல்லுறவை ஊக்குவிக்கவும், இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தவும், இந்த நாடுகளில் நடக்கும் மறுகட்டமைப்புப் பணிகளுக்கு இந்தியா உதவி செய்து வருகிறது.

நேபாளத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பூகம்பத்தில் அந்த நாட்டில் இருந்த பல வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் சேதமடைந்தன. அதில் கோயில்கள், நினைவுச் சின்னங்களும் அடங்கும்.

அந்தப் பூகம்பத்தில் நேபாள மக்கள் 9 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். அப்போது நேபாளத்துக்கு விரைந்து உதவி செய்த நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட இலங்கையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் இந்தியா செயற்படுத்தி வருகிறது என்று அந்தப் பதிலில் வி.கே. சிங் குறிப்பிட்டுள்ளார்.

(க)

# பழிவாங்கும் அரசியலுக்கு இ.தொ.கா.எந்தவொரு சந்தர்ப்பத்திலும் துணை போகாது

பழிவாங்கும் அரசியலுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் துணை போகாது என அதன் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இதனாலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை 46 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றில் தோற்கடிக்கப்பட்டது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் கலந்துக் கொள்ளவில்லை.



ஆறுமுகன் தொண்டமான் தெரிவிப்பு

இந்த விடயம் தொடர்பில் கொட்டகலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட ஆறு முகன் தொண்டமான் மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்ட போதும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இதே நிலைப்பாட்டில் இருந்தது எனச் சுட்டிக்காட்டினார்.




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.04.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.